Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666


16 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 | பாலம் 12 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2006


உலக கிண்ணம் 2006
06


தந்தையர் தினம் ஜூன் 18, 06
08


நேர்காணல் இயக்குனர் பேரரசு
15

## புகலிடத்தில் தமிழ்

*புகலிடம் எனும் போது "ஈழத்தமிழர்" ஶ்ரீலங்காவின் சிங்கள அரசின் கொடூரங்கள் காரணமாக 1983 ஆம் ஆண்டிலிருந்து தமது சொந்த நிலங்களை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் புகலிடம் பெற்று வாழ்ந்து வரும் நாடுகள் என்பது விளக்கமாகும். தமிழகம் நீங்கலாக அனைத்து நாடுகளும் வேற்றுமொழி நாடுகளாகும். இந்த வேற்று மொழி நாடுகளில் வாழ்கின்ற போது ஒரு நீண்ட காலவோட்டத்தில் தமது தாய்மொழியான தமிழைப் பேணிப் பாதுகாப்பார்களா அல்லது மறைந்து விடுமா என்பதே இன்றைய ஏக்கமாக உள்ளது.*

*இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாகத் தொல்மொழி வழிவந்து வளர்ச்சியடைந்த தமிழாகவும் அதற்கு முன் சில ஆயிர வருடங்களாகத் தொல்மொழியாகவும் காணப்படும் தமிழ் தொடர்ந்து நிலைத்து வரும் அதேவேளை, சில நிலங்களை வேற்றுமொழிகளிடம் பறிகொடுத்தும், சில நிலங்களில் வேற்றுமொழி உருவாக்கத்தால், பாதிக்கப்பட்டும் கூட இன்று "செம்மொழி" அந்தஸ்தை சட்டரீதியாகப் பெற்று நிமிர்ந்து நிற்கிறது. எதிர்காலம் பிரகாசமாக இருக்கப்போவதற்கு இது ஒரு சமிஞ்ஞை ஆகும். இன்றைய நிலையில் தமிழகத்தில் சென்னை நகரமக்கள் பேசுகின்ற தமிழ் என்பது ஆங்கிலம், தமிழக அண்டை மொழிகள் என்பவற்றின் கலப்பால் மொழி மாற்றம் ஏற்படக் கூடிய பேராபத்தைக் கொண்டுள்ளது. எழுத்து, ஊடகமொழி என்பன சிறப்பாக இருக்கின்றபோதும் பேச்சுமொழி சீர்கெட்டு வருகிறது. இது ஒன்றும் புதிய விடயமல்ல.*

*தொல்காப்பியக் காலத்திலேயே இத்தகைய மொழித் தூய்மையற்ற தன்மை வடசேரநாடு, வடசோழநாடு, தென் ஈழம் ஆகிய நிலங்களில்*

*தொடர்ச்சி 03ஆம் பக்கம்*

# நிர்பந்தங்களை ஏற்க மறுத்த தமிழர் தரப்பு

நிர்ப்பந்தங்கள் மூலம் தமிழர் தரப்பை பணியவைக்க முடியாது!

"ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னர் எம் மீது கடுமையான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அர்த்தமற்ற நிர்ப்பந்தங்கள் மூலம் தமிழர் தரப்பையோ, தமிழீழ விடுதலைப் புலிகளையோ பணியவைக்க முடியாது என்று நோர்வே பயணத்தை முடித்துக் கொண்டு வன்னி திரும்பியதும் அளித்த பேட்டியில் மிக கடுமையான தொனி யில் சுப. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் இருதரப்பு சமநிலையையும் அரசு ஏற்றுக் கொள்ள மறுத்தால், அதை ஏற்றுக் கொள்ளவைப்போம் என்று கடுமையா எச்சரித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதில்கள் தலைவர் பிரபாகரனுடன் விவாதித்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்த தமிழ்ச் செல்வன், பேச்சுவார்த்தைக்கு தடையாக உள்ள தடைகளை முதலில் நோர்வே நீக்க முயற்சி எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன், "எங்கள் நிலைப்பாட்டை நோர்வே அரசுக்கும், கண்காணிப்புக் குழுவுக்கும் தெளிவு படுத்தியுள்ளோம். அரசாங்கத்துடன்



எங்களை பேசவைத்து நல்லபெயரைத் தட்டிக் கொள்ளவே நோர்வே முயற்சித்தது. அதை முற்றாக நாம் நிராகரித்துவிட்டோம் " என்றார்

இதே சமயம் நோர்வேயின் ஐந்து கேள்விகளுக்கும் இலங்கை அரசு பதில் அளித்துவிட்டது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. என்ன பதில்களை அரசு தெரிவித்தது என்று இதுவரை தெரியவில்லையாகினும் நோர்வேக்கு அனுகூலமான பதில்களையே இலங்கை அரசு அளித்திருக்கின்றது என்று நம்பப்படுகின்றது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)
• Auto • Home • Commercial • Life
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice*****
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

" Making Dreams Reality "
HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1st PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.
*Independently owned and operated

THINKING OF BUYING / SELLING
HomeLife GTA Realty Inc., Brokerage *
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# பிரித்தானியரின் பொறுப்பு

மனிதர் இறைவனின் தூதர்களே. வேறு எந்தக் கருத்தும், அமைதியைக் குலைப்பதாகவே உள்ளது. மனிதன் இறைவனை பல்வேறு முறைகளில் தரிசிக்கிறான். மனிதன் ஆத்ம திருப்தியுடன், மன அமைதியும் அடைகிறான். வாழ்வில் தெரிந்தோ தெரியாமலோ எல்லா நலன்களும் பெற்றிடவும் செய்கிறான். இறைவன் திருவருள் நமது கண்ணிற்கு புலனாகாமல் நம்மை வாழ்வித்துக்கொண்டு இருக்கிறது. இன்று உலகத்திலே இலங்கை உட்பட எத்தனையோ நாடுகளில் அரசகொடுமைகள் நடந்து கொண்டே வருகின்றன. எமது தாயகம் தமிழீழம் சிறிலங்கா படைகளினால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இலங்கையின் வடக்கு, கிழக்கு அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். கிராமங்கள், இராப்பகலாக அல்லோல கல்லோலப்படுகின்றன. போரினால் சின்னாபின்னப்படுத்தப்படுகின்றன. உயிர்கொலைகள் நாளொருவண்ணம் அதிகரித்துக் கொண்டே போகின்றன. நாளுக்கு நாள் மடிந்தும், நொடிந்தும் போய்க் கொண்டேயிருக்கின்றன. உற்றார், உறவினரை இழந்தவர்கள் கண்ணீர்வடித்துக் கொண்டிருக்கிறார்கள். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதும், கால்கைகள், தலைகள் தறிக்கப்படுவதும், சிங்கள காடையர்க்கு ஒரு விளையாட்டு. ஈழத்தமிழரின் அவலங்களை தொலைக்காட்சி வானொலி நிலையங்களும் அம்பலப்படுத்திக்கொண்டே ஓலமிடுகின்றன. ஈழ மக்களின் தேசியப் போராட்டத்தின் உண்மையான புனிதத் தன்மையை உணராமல் அநியாயத்தையும், அக்கிரமத்தையும் அராஜகத்தையும் படுகொலைகளையும் நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள இனப்படுகொலை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கைகொடுத்து இருக்கிறது. பௌத்தத்தைப் பாருங்கள் இலங்கையில் அந்த மதம் பேரினவாதமாக உருவெடுத்து ஆட்சியாளர்களையும் அடக்கி இனப் படுகொலை புரிந்து வருகின்றது. என்ன மதவெறி. தமிழ் இராசாக்கள் ஆண்ட இடம் யாழ்ப்பாண இராச்சியம். பின்னர் வந்த பிரித்தானிய இராச்சியமே இவ்வளவுக்கும் மூலகாரணம் என்பதைக் கூடமறந்து, அமெரிக்கா ஏகாதிபத்தியத்திற்கும், அதற்கு துணைபோகும் பிரித்தானியாவின் தந்திரோபாயங்களுக்கும் அடிபணிந்து இன்று ஐரோப்பிய யூனியன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தடைவிதித்துள்ளது.

**கந்தையா சண்முகம்**

ஒரு தேசிய இனம் தன்னை பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்துவது தடுக்கப்படுகிறது என்றால், அங்கு தினம் தினம் குழந்தைகள் பெண்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுப்படுவதனை தடுக்க இந்த அரசாங்கங்களும், அனைத்துலக நாடுகளும், என்ன மாற்றுவழிகளை வைத்திருக்கின்றன. சுனாமி நிவாரண கட்டமைப்பு போன்று காலம் காலமாக தமிழ்மக்கள் பிரதிநிதிகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை இன்றைக்குமே நடைமுறைப்படுத்தாத சிறிலங்கா அரசுக்கு, அண்மையில் ஐ.நாவின் மனிதவுரிமை சபையில் அங்கத்துவம் பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. புலிகள் தடை-செய்யப்பட்ட இயக்கமாகி விட்டது. சரி இனி இந்நாடுகளில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இயங்கமுடியாவிடினும், புலம் பெயர்ந்துவாழும் ஒவ்வொரு தமிழனும் தமிழ் தேசியத்தின் பிரதிநிதியாக நின்று செயல்பட காலம் கனிந்துவிட்டது. காலத்துக்கு காலம் உயர்வும், மகிமையும் உள்ள ஆன்மீக உண்மையை அளிக்கும் மகான்கள் மிகவும் குறைவானர்களே பிறந்திருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல் உலகம் ஒருமித்து வாழவும் இயலாது. மானிட வாழ்க்கையின் அழகுமிக்க மலர்கள் அவர்கள். தமக்கென்று நோக்கம் எதுவும் இல்லாத கருணா சமுத்திரம் அவர்கள்.

இலண்டன் பாராளுமன்ற சதுக்கத்தில் நூற்றொரு (101) மணிநேரம் உண்ணாவிரதம் எடுத்து விட்டார் கவுன்சிலர் தயா இடைக்காடர்.. பிரிட்டனுக்கு பாரிய பொறுப்பும் கடமையும் உண்டு. இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் இலங்கையை ஆண்ட இனம் பிரித்தானியர். இன்று தமிழர் மீதான கொடூரங்களுக்கு ஒரு விதத்தில் காரணமாக இருந்த இனம். எதையும் கண்மூடிக் கொண்டு தட்டிக்கழிக்க முடியாது. திரு. தயா இடைக்காடர் கேட்கிறார். பிரித்தானியா, இவ்விவகாரத்தில் தலையிட்டு ஈழத்தமிழர்களுக்கு நீதியான நியாயமான நீதியைப் பெற்றுக் கொடுத்தல் இரண்டாவது சமாதான பேச்சு மூலம் சரியான தீர்வு காணல் மூன்றாவது வடக்கு கிழக்கில் இடம் பெறும், தமிழர்களின் படுகொலைகளை உடனடியாக நிறுத்துதல் முதலானவற்றை சர்வதேச சமூகமும், பிரித்தானியா அரசும் இந்தப் பிரச்சினைகளை உணரவேண்டும் என்பதற்காக ஜுன் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு பாராளுமன்ற சதுக்கத்தில் ஆரம்பித்தார். ஆறாம் திகதி செவ்வாய் பகல் 12 மணிக்கு உண்ணாவிரதத்தை முடித்தார். தமிழர்களுக்கு தன்னுயிரை மதிக்காமல் இப்படியான போராட்டத்தில் குதித்த தயாவுக்கு தமிழ் இனம் தலைசாய்த்து ஆதரவு வழங்கியதுடன் அவரின் உறுதிப்பாட்டிற்கு இறைவன் அருள்புரிய வேண்டுமென்றும் இடையறாது சிந்தனை செய்ய வேண்டும்.

# செல்வம் - சிந்தனையின் நிறைவு

ஓரிடந்தனிலே நிலை நில்லாது உருண்டோடிடும் பணம், காசு என்பர். செல்லும் தன்மை உடையதால் அதற்கு செல்வம் எனப் பெயர் ஏற்பட்டது போலும். நிலையில்லாத செல்வம் நாம் நிலைத்து வாழ்வதற்கு வகை செய்கின்றது. இதனாற் செல்வத்தை ஈட்டுவதிலும் காப்பதிலும் எல்லோரும் கவனம் செலுத்துகின்றனர். இல்லாளை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள் செல்லாது அவன் வாயிற் சொல் என்பதனால் செல்வத்தின் அவசியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனாற்றான் செய்த பொருளை என்றனர் போலும் வள்ளுவர். பொருள் அற்றவரை ஒரு பொருளாகச் செய்வது பொருள் என்பது பொருளின் மகத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

**நா. க. சிவராமலிங்கம்**

உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அவசிய, அத்தியாவசிய தேவைகளாகும். ஒவ்வொருவரும் தமது தேவைகளை நிறைவு செய்வதில் கவனம் செலுத்துகின்றனர். எமது தேவைகள் நிறைவு செய்யப்பட்டால் தான் மற்றவர் தேவைகளை நாம் கவனிக்க முடியும். தேவைகள் மனிதனை பணம் சம்பாதிக்க தூண்டுகினறன. பணம் சம்பாதிப்பதற்குரிய இலகுவழி உழைப்பேயாகும். உடலவலிமையையும், அறிவுவளத்தையும் பயன்படுத்தி அனேகமானோர் உழைக்கிறார்கள். சம்பளத்திற்கு வேலை செய்கிறவர்கள் தமது அன்றாடத் தேவைகளையே நிறைவு செய்யமுடியுமோயொழிய பெரும் பணக்காரர்களாக ஆகிவிடமுடியாது.


இருந்தும் பணக்காரர்களாக ஆகிவிடவேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவர் அடிமனத்திலேயும் இருக்கவே செய்கிறது. பணக்காரர்கள் பங்களா, கார், நிலபுலம் ஆகியவற்றை சொந்தமாக உடையவர்கள். ஆடம்பரங்களை, சுகபோகங்களை அனுபவிப்பவர்கள். நினைத்த உடன் எதனையும் வாங்கும் பணவலு உடையவர்கள். ஐந்நூறு ஆயிரம் நோட்டுக்களாகவே செலவு செய்பவர்கள். பணத்தில் புரள்வதால் எதிரிகளையே இல்லாமல் செய்துவிடக்கூடிய சக்தி படைத்தவர்கள். இதனாற்றான் பணம் பாதாளம் மட்டும் பாயும் எனப்பட்டது போலும். கைநிறையப் பணம் சேர்த்து பெரும்பணக்காரர் ஆவதற்கு வழியுண்டா என்ற கேள்விக்கு ஆம் என்றே பதில் கூற வேண்டும்.

முதலாவதாக பூர்வீகச் சொத்து ஒருவர் கைக்கு வருவதால் பெரும் பணக்காரர் ஆகலாம். ஆனால் எத்தனை பேர் பூர்வீகச் சொத்துக்களை நம்பி வாழமுடியும். பெற்றோர் அல்லது பாட்டன்மார்கள் பெரிய அளவில் சொத்துக்களைச் சேகரித்து சேர்த்து வைத்திருக்க வேண்டும். அத்துடன் அவை முறையாகப் பிள்ளைகளுக்குச் சேரவேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்க வேண்டும். பூர்வீகச் சொத்தை வைத்து கொண்டு பணம் பண்ணியதாகப்பேசுவது பாராட்டத்தக்க விடயம் அல்ல. இப்படிக் கிடைத்த சொத்தை பாதுகாக்க பல்வழிகளில் முதலீடு செய்து அதிக அளவில் பணம் சம்பாதிக்க முடியும். அதற்கு போதுமான புத்திசாலித்தனமும் திறமையும் தேவை.

இரண்டாவது சேமித்த பணத்தை அதிகமாக்க நிதி நிறுவனங்களிலும், மியூச்சுவல் பண்டுகளிலும் வைப்புச் செய்வது மற்றும் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதுமாகும். இதற்கு அதிக அளவில் சிந்திக்கும் ஆற்றல் தேவை. விஷயம் தெரிந்தவர்களிடம் யோசனை கேட்டு செயற்படவேண்டும். சிலர் தங்கத்தில் முதலீடு செய்கிறார்கள். தங்கத்தின் விலை ஏறுவதால் அதில் போட்ட பணம் பாதுகாப்பாக இருக்கும் என்பதுடன் அதிக விலை போகும் போது உடனடியாக விற்கவும் முடியும். மேலும் தங்கத்தை வாங்கும் போது ஒருவிலை, விற்கும் போது அன்றைய சந்தை விலையிலும் சற்றுக்குறைந்ததாகப் பணம் தருவார்கள். நகைகளாக வங்கியில் கொடுத்தாகுலும் சேதாரம், தரக்குறைவு என்று குறைவாகப் பணம் தருவார்கள். மேலும் தங்கத்தையோ, நகைகளையோ வீட்டில் வைத்திருப்பது ஆபத்தானது. பாதுகாப்பிற்காக வங்கிப் பாதுகாப்புப் பெட்டிகளில் வைக்கவேண்டும்.

நிலங்களில் முதலீடு செய்வது மிகவும் பாதுகாப்பானது. இலாபகரமானது. ஆனாலும் ஒரு நிலத்தை வாங்கும் போது பிற்காலத்தில் அது நல்ல விலைக்கு போகுமோ என்று பார்த்து வாங்க வேண்டும். நிலத்தைப்பற்றிய பூர்வீகங்களைப் நன்கு அறியவேண்டும். நிலங்களை வாங்கியபின் பலஆண்டுகள் ஆனபின்னாலேயே அதிக விலைக்குப் போகும். ரியல் எஸ்ரேற் என்ற பெயரில் பணத்தை முதலீடு செய்து வீடுகளை, அடுக்கு மாடிகளைக் கட்டி விற்பதென்பது அந்தத் தொழில் தெரிந்தவர்களுக்குத் தான் இலாபத்தைக் கொடுக்கும். அனுபவம் இல்லாமல் இத்துறையில் இறங்கிய பலர் அதிகளவு நட்டமடைந்து தலைமறைவாகி உள்ளார்கள்.

மூன்றாவதாக எப்போதும் நேர்மையாகவும் நம்பிக்கையாவும் வேலை செய்வது பணத்தை தன்னால் தரும். எந்த ஒரு வேலையிலும் அயராது வேலை செய்பவர்கள் சிந்தித்து வேலை செய்பவர்கள் நாளடைவில் பெரிய அளவில் சம்பாதிக்க முடியும். ஒருவரிடம் என்ன திறமை இருக்கின்றது என்று தெரிந்து கொண்டு அதற்கு ஏற்ப தொழில் செய்ய வேண்டும்.



நான்காவதும் இறுதியுமான குறுக்குவழியில் பணம் சம்பாதிப்பது ஆகும். பெரிய அளவில் கொள்ளை அடிப்பது, திருடுவது, மற்றவர்களை ஏமாற்றிப் பணம் பிடுங்குவது, குண்டர்களை வைத்து ஆட்களை கடத்திப் பணம் பறிப்பது போதைப்பொருட்களை கடத்தி விற்பனை செய்வது குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுவது, லாட்டரிச் சீட்டு வாங்குவது போன்றவையாகும். இவற்றின் மூலம் பெரும் பணம் ஈட்டினாலும், சில தண்டனைக் குரிய குற்றங்களாகும்.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்பர். எனவே உதவும், உறவினர், நல்ல நண்பர்கள், உடல்நலம், மனநலம், ஆரோக்கியமான வாழ்வு என்பனவும் செல்வங்களேயாகும். ஆகையினால் செல்வம் என்பது பண நோட்டுக்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பது தெளிவு.

பொருட்செல்வம் பூரியர் கண்ணும் உள என்று கூறும் வள்ளுவர் உலகில் ஏற்படும் அவலங்களுக்கு அஜாரகத்திற்கும் அவர்களது கைபட்ட செல்வமே காரணம் என்று சொல்லாமல் சொல்லுகின்றார் எனலாம். செல்வத்தின் பயனே ஈதல் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும். 'செல்வத்துட் செல்வம் அருட்செல்வம்' என்பதும் மறக்கற்பாலது அன்று


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

**Expert Building Inspections**

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315**

# புகலிடத்திலும் தமிழ் நிலைக்கும்

*01ஆம் பக்கத்தொடர்ச்சி*

*காணப்பட்டமை காரணமாகவே பின்வரும் செய்யுள் தொல்காப்பியத்தில் இடம் பிடித்தது.*

“தென் - பாண்டி குட்டங் குடங் கார்கா வேண் பூழி
பன்றி யருவா அதன் வடக்கு - நன்றாய
சீதம் மலாடு புனநாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்.” - சொல் 9 (3)

தமிழக அறிஞர்கள் இந்த நாடுகளின் வரைபடங்களை ஏகோபித்த கருத்தில் தரவில்லை. ஆனால், சில விடயங்கள் கருத்துக்கு எடுக்கப்படலாம். சங்கத் தொகை இலக்கிய காலத்துக்கு முற்பட்டதே தொல்காப்பியம் என்ற வகையில் இது ஆராயப்பட வேண்டும்.

துளு எனும் தொல் (தொனு) மொழியிலிருந்து அதாவது திராவிட மொழியிலிருந்து தமிழ் எனும் பிராந்திய மொழி வளர்ச்சியடைந்தபோது அம்மொழியைச் செம்மையாகப் பேசிய, எழுதிய மக்களைக் கொண்ட நிலங்கள் இச் செய்யுளால் விளக்கப்பட்டுள்ளது. மூத்த தமிழ் வேந்தர் “சேரர்” என மறுப்பாரின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் சங்கத்தொகைக் காலத்துக்கு முந்திய சேரர் (செங்) குட்டவர்களும், அதியர் (மான்) பரம்பரைகளுமேயாவார். இவர்கள் பாண்டியரிடம் பன்றி, தென்பன்றி நாடுகளை இழக்க முன் பன்னெடுங்காலம் சேர, பாண்டிய நாடுகளை ஆண்ட தொல் குடிகளாவர்.

“செந்தமிழர்” என்றால் சேரநாட்டு மக்கள் என்றும் “தமிழர்” என்றால் சோழ, பாண்டிய நாட்டு மக்கள் என்றும் பேரறிஞர் ஔவை துரைச்சாமி அவர்கள் தனது “சேரநாடு” எனும் நூலில் குறிப்பிடுவது மேற்கூறிய கருத்துடன் ஒத்துப் போகிறது.

செய்யுளில் வரும் யருவா (அருவா) அதன் வடக்கு என்பன ஈழத்தின் பகுதிகளாயிருக்கலாமென்பதே அதிகம் பொருத்தமாகக் காணப்படுகிறது. இதற்கான காரணிகள் உள்ளன. வைகை நதி தொல் அரசரிடமிருந்தபோது அவர்கள் மன்னாரையும் (அருவியாறு) அதன் வடக்கேயான வன்னி, யாழ்ப்பாணத்தையும் ஆண்டதனால் செந்தமிழ் இங்கும் பேசப்பட்டுத் தொல்காப்பியத்தில் இடம் பிடித்திருக்கிறது. “தொல்காப்பியத் தமிழ்” இங்கு இன்னமும் நிலைத்திருப்பதாகத் தமிழகத் தலைவர்களே ஒத்துக் கொள்ளுகின்றனர். அதுமட்டுமன்றி இத்தமிழர் - தமிழ் இனத்தையும், தமிழையும் உலகறியச் செய்து கொண்டிருக்கின்றனர். அருவியாறு என்று மட்டுமே குறிக்கப்பட்டாலும் மன்னார், அனுராதபுரம், திருகோணமலை தழுவிய தொல் பிரதேசம் இதுவெனலாம்.

தொல்காப்பியச் செந்தமிழ் நிலத்தில் இன்றைய திருவனந்தபுரம் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி மங்களபுரம் (மங்களம் - முடிவு) வரையான தென்னிந்திய மேற்குக்கரை நிலங்கள் இன்று மலையாளமொழி நாடுகளாயின. தொகை இலக்கியங்களினூடாகச் செய்யப்பட்ட ஆய்வுகளில் தெற்கேயிருந்து வடக்காக இவை வேணாடு, குட்டம், குடம், பூழி ஆகிய நான்கு நாடுகள் என்பர். தொன்மைக் குட்டநாடு திண்ணைவேலியிலுள்ள சிவந்தநீர் வாவிகள் (செங்குட்டம்) கொண்ட நிலமென்றும் தொகை இலக்கியக் காலக் குட்டநாடு இன்றைய கேரள கொல்லம், கோட்டயம் ஆகிய நிலங்களுக்கு இடைப்பட்ட பேரியாற்றுப் பகுதி என்பர். (தொல்) பூழி நிலம் தஞ்சாவூர் என்பர். தொல் குடநாடு (குடம் - கிழக்கு) அல்லது குடக்கோ மண்டலம் வைகை - மதுரை நிலமென்பர்.

இவைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளப் போதிய சான்றுகள் இல்லாவிடினும் ஏற்புடையதாகக் காணப்படுகிறது. ஆகவே செந்தமிழ் நிலம், செம்மொழி என்பன பற்றிக் குறிப்பிடாமல் புகலிடத்தில் தமிழ் பற்றி எழுதுவது முழுமையானதல்ல. ஈழத்தமிழர் தொல்காப்பியம் குறிப்பிடும் செந்தமிழர் எனக்கூறப் போதிய காரணிகள் இருப்பதுடன் மொழிக்காக ஒரு உலகறிந்த போராட்டம் நடத்துவதும், தமிழ்மொழியை அழியாது காக்க அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்பதும் கண்கூடு. கற்பகதரு எனப்படும் “பனை” செந்தமிழரின் அடையாளங்களில் ஒன்றாகும். கற்பை அகமாகக் கொண்ட ஆட்சி நிலங்களில் காணப்படும் விருட்சம் இதுவாகும். தொல்காப்பியமும் தொகை இலக்கியங்கள் சிலவும் பனந்தோட்டு மாலை செங்குட்டவர்க்கும், அதிய (ஆதியர்) மான்களுக்குமுரிமையானது என்பதை விளக்குகின்றன. தொன்மைக் காலத்தில் பனை எங்கெல்லாம் காணப்பட்டதோ அந்த நிலங்களெல்லாம் இவர்களின் ஆட்சிக்குட்பட்ட நிலங்கள் என்பதும் பின்னர் பகுதிபகுதியாக இழந்தனர் என்பதும் குறிப்பிடக்கூடியது.

## வேலாயுதம்

தமிழரின் புலம்பெயர்வு சோழர் காலத்தில் (கி.பி 9 - 10) நடைபெற்றுள்ளது. பின்னர் ஆங்கிலேயர் காலத்திலும், தற்போது ஈழத்திலலிருந்தும் நடைபெற்றுள்ளது. அதேபோல, தமிழகத்தில் கன்னடர், தெலுங்கர், வடநாட்டார், வேளிர், யவனர் (அழகானவர்கள்) எனப்படும் கிரேக்கர், பாரசீகர், சீனர் எனப் பல்லினங்களும் பல்வேறு காலங்களில் குடியேறித் தமிழராயினர். எனவே, செந்தமிழ் நில மக்களே மூலவேர் என்பதும் இவர்களே மரபணுவழி மொழியையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் உறுதியைக் கொண்டிருப்பர்.

திண்ணைவேலித் தம்பபானி (செந்நதி) தமிழ் மொழியின் பெயர்த் தோற்றத்துக்கான நிலம் ஆயின் இன்று கனடாவில் வாழும் ஈழச் செந்தமிழருக்குச் செம்மொழியைப் புகட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் வாய்த்தமை கூட மரபணு வழிவந்த தொடர்புகள் என்றால் மறுப்பதற்கில்லை.

சோழர் காலத் தமிழர் இந்து சமுத்திரத்தில் பல நாடுகளில் வாணிபத்தையும் ஆட்சியையும் விருத்தி செய்த போதும் அங்கெல்லாம் தமிழ் மொழியை வேரூன்ற வைக்கவில்லை. சிவாலயங்களைக் கட்டி அதனூடாக மக்களாதரவைத் தக்க வைத்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் தமிழகத்திலிருந்து ஈழத்து மலைநாடு, மலாயா - சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, கயானா, பிஜிக்கு கொண்டு செல்லப்பட்ட தமிழர் மற்றும் ஈழத்திலிருந்து மலாயா - சிங்கப்பூர் சென்ற தமிழர் என்போரில் ஈழம், மலேசியா - சிங்கப்பூர் தமிழர் ஆசியப் பிராந்தியம் என்ற வகையில் தமிழ், கலாச்சாரம் என்பவற்றை பேணி வருகின்ற போதும் மலேசியாவில் முதல் மொழியாக மலே கற்க வேண்டும். அடுத்து ஆங்கிலம் பின்பே தமிழைக் கற்கும் நிலை உள்ளது.

புகலிடத் தமிழர் எனப்படும் ஈழத்தமிழர் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஒல்லாந்து, டென்மார்க், நோர்வே, சுவீடன், ஜேர்மனி, பிரான்சு, பெல்ஜியம், சுவிற்சலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் பெருமளவாகவும் இன்னும் பல நாடுகளில் மிகச் சிறிய எண்ணிக்கையிலும் கடந்த 20 வருடங்களில் புகலிடம் பெற்றுள்ளனர்.

கனடா, நோர்வே, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்பன நிரந்தரக் குடியுரிமை பெறும் சாத்தியங்களை அதிகமாகவும், ஏனைய சில மிகச் சிறிய அளவிலும் ஏனையவை பூஜ்யமாகவும் உள்ளன. ஆங்கிலமொழி நாடுகளில் ஒன்றான கனடாவில் பிரெஞ்சு இரண்டாவது மொழியாகும். ஏனையமொழி பேசும் நாட்டுத் தமிழர் தத்தம் நாட்டு மொழியை முதன் மொழியாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் கற்க வேண்டியுள்ளது. எனவே, மொத்தத்தில் புகலிடத் தமிழர் தமிழை மூன்றாவது மொழியாக மட்டுமே கற்கும் நிலையில் உள்ளனர்.

தமிழையும் ஆங்கிலத்தையும் அல்லது வேற்றுமொழியொன்றையும் கற்றறிந்தவர்களான இன்றைய பெற்றோர் ஒரு குழந்தைக்கு மூன்றாவது மொழியொன்றையும் ஊட்ட ஆசைப்படும்போது அப்பிள்ளைகளுக்கு சுமத்தும் சுமை அதிகமாகப்படலாம். “குழந்தைகள் எத்தனை மொழிகளென்றாலும் கற்றுவிடும்” என்று கூறும் நம்மில் எத்தனை வீதமானோர் ஈழத்தில் ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் கற்றோம். ஆகவே, “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்றாலும் கூட நான் 21வயதில் தான் சிங்களத்தில் “அ” எழுதத் தொடங்கி நான்கு வருடங்களில் க. பொ. த சிங்களபாடத்தில் சாதாரண சித்தி பெற்றேன். நான் இங்கே கூற முற்படுவது மொழி கற்பதற்கான வயதைத் தீர்மானித்தல் பற்றிய விடயமே.

தாய்மொழி நாடல்லாத ஒரு நாட்டில் குழந்தை முதன்மொழியாக இன்னொன்றைக் கற்கும் போது அம்மொழித் தேர்ச்சியை பெறாத பெற்றோருடைய உதவியும் இன்றி ஒரு சவாலை எதிர்கொள்ளுகின்ற நிலையில் இரண்டாவது, மூன்றாவது மொழிகளைப் பிஞ்சுவயதில் ஊட்டிவிடவேண்டும் என்பது அளவுக்கு மிஞ்சியதாகவேபடுகிறது. எனவே, ஆரம்பக்கல்வி, உயர்கல்விக் காலத்தில் மும்மொழிச் சுமை நூறு வீதமான மாணவர்களையும் பொறுத்தவரை இலகுவானதல்ல. இதேவேளை பல்கலைகழகச் சிறப்புப் புள்ளிகள் வேண்டுமெனில் உயர்கல்வி (Secondary) காலத்தில் தமிழில் ஒரு கணிசமான தேர்ச்சியைப் பெறவேண்டியுள்ளது. இதன் மூலம் ஒரு வரையறையான பாடவிதானத்துள் புள்ளிகளை அளிக்கலாமேயொழிய முழுமையான தமிழ்த் தேர்ச்சி பெற்றார்களெனக் கூறமுடியாது. ஆகவே முதியோர் தமிழ்க் கல்வி முறையில் (Adult Education) தான் முதிர்ந்த மாணவர், தொழில்களில் இணைந்து கொண்டவர்களுக்கு (இளைஞர்கள்) விழிப்பை ஏற்படுத்தித் தமிழ் கற்பிப்பதில் அதிக கவனம் செலுத்துதல் நன்மை பயக்கலாம்.

மேலே குறிப்பிட்டவை எல்லாம் எழுத்து, வாசிப்புத் தமிழ் பற்றியதே. பேச்சு என்பது தனியான துறையாகும். பண்டைய செந்தமிழ் நிலத்தில் ஏடுகளில் எழுதவோ, வாசிக்கவோ ஒரிரு வீத மக்களே இருந்துள்ளனர். இது சற்று அதிகப்படலாம். ஆனால் தொண்ணூறு வீதமான மக்கள் பேச மட்டுமே தெரிந்தவர்கள். இவர்களின் நிமித்தமே இலக்கண வரம்புகள் தோன்றிச் செந்தமிழ் நிலங்கள் இனங்காணப்பட்டன. எனவே, புகலிடத்திலும் பேச்சு வழக்கு அதி முக்கியமானது. எழுத்தில் இல்லாத இருக்குவேதம் ஆயிரக்கணக்கான சூத்திரங்களை ஆயிரத்துநூறு வருடங்களுக்கு மேலாகச் செவிப்பறை ஊடாகச் சொல்லிக்கொடுத்து அழியாமற் பேணியமை எமக்கு ஒரு பாடமாகும். இந்தவிடத்தில் ஒன்றைக் கூற வேண்டும். எழுத்து மொழியாகவிருந்த சமஸ்கிருதம், இலத்தீன் ஆகியவை இறைவழிபாட்டுக்கும் சிறப்பாகப் பயன்பட்டன. இன்று இந்த மொழிகள் எங்கே? இன்று சமஸ்கிருதத்தை மதக்கடமைகளுக்காக அல்லது பழைய வரலாற்றை அறிய அல்லது மொழி ஆய்வு செய்ய மட்டுமே படிக்கிறார்கள். அவ்வாறே வைத்தியம், சட்டத்துறை போன்ற உயர்கல்விக்காக இலத்தீனைப் படிக்கிறார்கள். தமிழ் கூட புகலிடங்களில் மேற்கூறியவை போன்ற ஏதாவது தேவைகளுக்காகப் படிக்கும் நிலையே சாத்தியமாக உள்ளது. ஆனால், பேச்சு என்பது அப்படியல்ல. காதால் புகுந்து வெளியே திரும்பிவரும் வடிவமே பேச்சு மொழியாகும். ஆகையால் பிள்ளைகளைக் கேட்க வைத்தல், பேச வைத்தல் என்பன பெற்றோரின் முக்கிய கடமையாவதுடன் சமூகத்தின் பொதுக் கடமையுமாகிறது.

புகலிடத்து நிலைமைகளை அவதானித்தால் “சைவமும் தமிழும் இரண்டு கண்கள்” என்ற முன்னையோர் வாக்கிற்கிணங்க சமநிலைச் செயற்பாடுகள் காணப்பட வேண்டும். அதாவது ஆன்மீக ஈடுபாட்டாளர் சைவக் கண்ணைப் பேணுவது போல, திராவிட நாத்திகர், பகுத்தறிவாளர், சமதர்மசித்தாந்திகள் அணிதிரண்டு தமிழ்க் கண்ணைப் பேணவேண்டும். இது நடைமுறையில் பாதியாகவும் மீதி ஏட்டுச் சுரைக்காயாகவும் உள்ளது. தமிழ் வர்த்தக நோக்குகளுக்கு மட்டும் பயன்பட்டால் போதாது. “தமிழன் தமிழில் பேச வேண்டும்” என்று ஆங்கிலத்தில் கட்டுரை வரைந்து தனது புலமையைக் காட்டும் மனோபாவம் காலனித்துவக் காலத்திலே ஏற்பட்டது. இத்தகையோரே பாராளுமன்றம் சென்று தமிழுக்காகப் போராடும் நிலையும் காணப்பட்டது.

வெள்ளவத்தைக் கோவில்களில் “மம்மி கெற் மீ சம் வீபூதி” (Mom get me some veepoothy) என்று பேசிய “ஆங்கிலமோகத்” தமிழர்களின் வாழ்வு ஈற்றில் என்னவாயிற்று என்பவற்றை வைத்துக் கொண்டு நாம் பல பாடங்களைக் கற்கலாம். அத்தோடு புகலிடத்தில் தமிழ் கற்று என்ன பிரயோசனம் என்போர் தமிழர் எனும் நாமமழிந்தால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

புகலிடத் தமிழ் என்பது “பேச்சு”த் தமிழை மையமாக வைத்து இயங்குதல் சுலபம். எழுத்து வாசிப்பு, கலைப்படைப்பு, ஊடகத்துறை என்று விரிவடையும் போது கடினமானது. சிறுவர் முதல் பெரியோர் வரை பேணி வரவேண்டியது முதலாவது எனப்படும் பேச்சுத்தமிழாகும்.

இந்திய அரசின் ‘செம்மொழி” அந்தஸ்து தமிழுக்கு கிடைப்பதால் மொழி புதிய உத்வேகத்துடன் வளரும். சர்வதேச மட்ட உயர்கல்வி, நூல்நிலையங்கள், இந்திய மத்திய அரசின் நிதி என்பவற்றுடன் உலகம் கிராமியமயமாதல் (Global Village) அசுரவேக தொலைத்தொடர்புகள், விமானப் பயணங்கள் என்பன புகலிடத்தமிழரை ஈழம், தமிழகம் ஆகிய இரண்டுடனும் இணைத்து வைத்திருத்தல் போன்றவை தமிழ் நிலைப்பதற்கான சாதக அம்சங்களாகும்.

*தொடர்ச்சி 22ஆம் பக்கம்*


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# பாவனையும் குழந்தைகள் விளையாட்டும்

## கோயிலும் கூத்தும் (2)

குழந்தைகளின் விளையாட்டுக்களில் பாவனைப் பண்பைப் பரக்கக் காணலாம். யாரும் கற்பிக்காமலேயே பாவனை பண்ணுவது குழந்தைகளின் இயல்பு. தாயைப் போல, தந்தையைப் போல, தமது ஆசிரியரைப் போல நடக்க முனைகையில் தங்களை அறியாமலேயே அவர்கள் நடிக்கவும் பழகிக்கொள்கிறார்கள். தங்களைத் தமது தாய்மார் ஓராட்டுவதைப் பார்த்து, அதே போலப் பாவைப்பிள்ளைகளை ஓராட்டுவது அவர்களுக்கு விளையாட்டு. அதனைப் பார்க்கும் வளர்ந்தவர்களுக்கு அது நாடகம்.

குழந்தைகளுக்கு அவதான சக்தி அதிகம். அதனால் வளர்ந்தவர்களின் செயல்களை உற்றுக் கவனித்துத் தாமும் அவற்றை மீளச் செய்து பார்ப்பதில் இன்பம் காண்கிறார்கள். பாவனை பண்ணுவதில் குழந்தைகளைப் போல ஆர்வங் காட்டுகின்றவர் வேறெவரும் இலர்.

வயது செல்லச் செல்லப் பாவனை எமது வாழ்வியல் அநுபவத்தின் இன்றியமையாத பகுதியாகிவிடுகின்றது.

வளர்ந்தவர்கள் தம்மைக் கவர்ந்த குருமாரைப் போல நடக்க முயல்வதும் நடிகரைப் போல நடிக்க விழைவதும் பேச்சாளரைப் போலப் பேசிப் பார்ப்பதும் பாடகரைப் போலப் பாடிப் பழகுவதும் எழுத்தாளரைப் போல எழுத எத்தனிப்பதும் எல்லாமே பாவனையின் பாற்பட்டவைதாம்.

### மீளச் செய்தல்

ஒன்றைப் பார்த்து அது போலச் செய்ய விரும்புவது மனித இயல்பு. கண்டதை அல்லது விருப்பமான ஒரு நிகழ்வை மீளச் செய்து காட்ட வேண்டும் என்ற மனித ஆர்வத்தின் விளைவே நாடகத்தின் தோற்றமாகும்.



ஆதிகாலத்தில் மனிதர் வேடுவராக நாடோடித் திரிந்த காலத்தில் தந்தையுடன் மகன் ஒருவன் வேட்டைக்குச் சென்ற சம்பவம் ஒன்றைக் கற்பனை செய்து பார்ப்போம்.

தந்தை பதுங்கிப் பதுங்கிக் குறிவைத்து ஒரு பன்றியைக் கொன்று, அதனைத் தன் இருப்பிடத்துக்குக் கொண்டுவந்தான். அங்குள்ள அவனது மூத்தவர் அதனை வெட்டி, சுட்டுப் பதமாக்கிக் குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் கொடுத்தனர்.

பசியாறியபின் இடைக்கிடை நடைபெறுகின்ற மகிழ்வூட்டு நிகழ்வு அன்றும் நடந்தது. ஒருவன் யானையைப் போலப் பிளிறினான். இன்னொருவன் புலியைப் போல உறுமினான். வேறொருவன் சிங்கத்தைப் போலக் கர்ச்சித்தான். மற்றொருவன் கோழியைப் போலக் கூவினான். மயிலைப் போலவும் ஒருவன் ஆடிக் காட்டினான். ஒருவன் அம்போடும் வில்லோடும் குறி வைத்துத் துரத்த மற்றொருவன் மானைப் போலத் துள்ளித் துள்ளி ஓடினான்.

அடுத்து தந்தையுடன் சென்ற மகனும் எழுந்து நின்றான். சின்னப் பையன் ஆதலால் சுற்றி நின்ற எல்லோரும் அவனை ஆவலுடன் உற்று நோக்கினர். அவன் தந்தை எப்படிப் பன்றியைக் கொன்றான் என்பதைச் செய்து காட்டினான்.

இப்படித்தான் மொழி தோன்றுவதற்கு முன்னதாகக் களியாட்டங்கள் உடம்பை மட்டுங் கொண்டு நடத்தப்பட்டன.

மேற்சொல்லப்பட்ட கதையில் இயற்கையைப் பார்த்துச் செய்தல், மனிதரைப் பார்த்துச் செய்தல் ஆகிய இரண்டும் இடம்பெற்றிருப்பதைக் கவனிக்கலாம். இயற்கையிலிருந்தே மனிதர் முதன்முதலாகப் பாடங்களைப் படிக்கத் தொடங்கினர்.

சில பறவைகள் கூவும். சில கொக்கரிக்கும். இவற்றிலிருந்து மனிதர் இசைக் கலையை வளர்த்துக் கொண்டனர். சில பறவைகள் நடனம் ஆடும். சில விலங்குகள்கூட எதிர்ப் பாலைக் கவர்வதற்குப் பலவித உடல் அசைவுகளைச் செய்யும். இவற்றைப் பார்த்து மனிதர் நடனங்களை ஆடக் கற்றுக் கொண்டனர்.

ஒரு நிகழ்வை மீளச் செய்து பார்க்க வேண்டும் அல்லது மற்றவருக்குச் செய்து காட்ட வேண்டும் என்ற ஆர்வத்திலிருந்து நாடகக்கலை உருவெடுத்தது.

### சமயச் சடங்குகள்

சமயச் சடங்குகளின் வளர்ச்சிக்கும் மனிதரின் பாவனை இயல்புதான் காரணமாக இருந்திருக்கின்றது. குறிப்பாக, இந்து சமயச் சடங்குகள் பெரும்பான்மையானவை பாவனைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவை.

சமயச் சடங்குகள் நாடகத்துக்கு வடிவம் கொடுத்திருக்கின்றன. கோயில்கள் நாடகத்தை வளர்த்தெடுத்திருக்கின்றன.

எனது வாழ்க்கையில் நடந்திருப்பதுவும் அதுதான். வீரபத்திரர் ஆலயச் சடங்குகளிலிருந்து எனது நாடகம் பிறந்திருக்கின்றது. அதாவது, எனது நாடக உணர்வு, தம்பு அண்ணரைப் போல ஆடிப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆவல், நடிப்பு எல்லாவற்றுக்கும் வீரபத்திரர் ஆலயமே வித்திட்டிருக்கின்றது.

அதுமட்டுமன்று. நான் பார்த்த முதற் கூத்தும் வீரபத்திரர் ஆலய வெளி வீதியில் நடந்த ஒன்றுதான். அதுபற்றிய அநுபவத்தை அடுத்த அதிகாரத்தில் தொடர்கின்றேன்.



கவிஞர் வி. கந்தவனம்


JUSTIN WILLIAM* 416-803-7344
SASI CHELVARATNAM* 416-725-1125
BALAN KANESAPILLAI* 416-844-5401
JAYANTHYI SRITHARAN* 416-918-5872
VASANTHY NIRANJAN* 416-845-8272
RAVI PARAMU* 416-262-4176
RAVI RAVEENDRAN* 416-817-8479
RAJ .A . RASARATNAM* 416-726-8055
SHIVA MANIAM* 416-727-5052
MORRISON SAVERMUTTHU* 416-220-3050
SEELAN SIVA AIYADURAI* 416-451-0271
KETHEES SEEVARATNAM* 416-275-5788
SHAN THAYAPARAN* 416-567-7675
KUMAR SINNATHAMBY* 416-576-4357
THANA SUSEENDRA* 416-893-4376
PARAM. G GNANASWARAN** 416-230-1107
SHIVA SHARMAH* 416-666-5515
*Sales Representative **Broker

எம்மிடம் வீடு வாங்கும், விற்கும், அல்லது முதலீடு செய்வதன் மூலம் பின்வரும் பரிசுகளை வெல்லுங்கள்*

Call the real
REAL TEAM


1ST PRIZE 2007 COROLLA
2ND PRIZE PLASMA TV
3RD PRIZE LAPTOP PC-P4

7 Consolation Prizes
3 Digital cameras, 3 BBQ Machines, 1 Bicycle
சீட்டிழுப்பு ஜனவரி 2007 இல் நடைபெறும்

Now Serving in two locations
HOMELIFE/GTA Realty Inc. Brokerage

1711 McCowan Rd., Suite 206,
Toronto, ON M1S 3Y3
(HWY 401 & McCowan Rd.)
416.321.6969

145 Traders Blvd. E., #28
Mississauga, ON L4Z 3L3
(HWY 401 & HWY 10)
905.712.2666

* Some conditions may apply, Vehilcle may not be as illustrated

# ஒரு மேதையின் பரிச்சயம்

காஞ்சிபுரம் நயினாப் பிள்ளையின் சிறு பிராயம் பற்றி அவர் வரலாற்றில் ஒரு தகவல் சொல்லப்படுகிறது. கோனேரிராஜபுரம் வைத்தி நாதய்யரிடம் ஆரம்ப சிக்ஷைக்குப் பிறகு, பல்லவி பாட அவர் கற்றுக் கொண்டது, ஒரு நாடோடி பண்டாரத்திடம். அந்தப் பண்டாரம் சாப்பிடுவது ஒரு வேளை, நாலு வீடுகளில் கவளம் சோறு பிச்சையெடுத்து அதில் உப்புக் கலந்து மதியம் சாப்பிடுவதோடு சரி. வேறு எதுவும் வேண்டாம். தொடர்ந்து ஓர் இடத்தில் இருப்பதில்லை. இப்படிப் பிச்சையெடுக்கும் வேளை தவிர மற்ற நேரங்கள் எல்லாம் சங்கீத சிக்ஷை தான். அவர-ிடம் சங்கீதம் கற்கத் தொடங்கிய பின், இதுகாறும் மற்றவர்களிடம் கற்றதெல்லாம் சங்கீதம்தானா என்று எண்ணத் தோன்றிற்றாம் நயினாப் பிள்ளைக்கு. பண்டாரத்திடம் இத்தகைய குருகுலம் அதிக நாள் நீடிக்கவில்லை. திரும்பி வரும்போது மிச்சத்தைச் சொல்லித்தருவதாகச் சென்றவர் தான். பின் அந்தப் பண்டாரம் திரும்பவே இல்லை. அந்தப் பண்டாரத்தின் பெயர் என்ன, அவர் எப்படிப் பாடினார் என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. எல்லாம் பாடின கணத்தின் காற்றோடு போயிற்று. தியாகய்யரோ, தீட்சதரோ அல்லது அவர்களுக்கும் முந்தியவர்களோ பெரிய கலைஞர்கள் என்று கேள்விப்படுகிறோம். அதற்கு மேல் அக்கலையுடன் என்ன பரிச்சயம் நமக்கு? மாதவி ஆடிய நடனம் என்ன? அவள் நடனத்திற்கான பாட்டு எப்படியிருந்தது, பரிபாடல் எப்படி பாடப்பட்டிருக்கும் என்பது நமக்குத் தெரியுமா? என்ன பண் என்று தெரியும், இசையமைப்பாளர் தெரியும், ஆனால் அந்த இசையின் ஒரு ரூபம்? தியாகய்யர் பாடியதே, ஒரு பரம்பரை இருந்தும், ராகம் தெரிந்தும், தியாகய்யர் எப்படி பாடியிருப்பார் என்று தெரியுமா. இது ஒரு பெரிய சோகம். மற்ற எந்த கலைக்கும் இல்லாத அக் கணமே தோன்றி மறையும் கணங்களின் வாழ்வு தான் இசைக்கும் நடனத்துக்கும்.

ப. சோழநாடன் எழுதியிருக்கும் டி.என். ராஜரத்தினம் பிள்ளையின் வரலாற்றில், இப்படிப் பலகட்டங்கள் வருகின்றன. சோகம் கப்பும் நினைவுகள். ராஜரத்தினத்தின், மாமனும், வளர்ப்புத் தந்தையுமான திருமருகல் நடேசபிள்ளையின் வாசிப்பு ஒன்றை எட்டையபுரம் ஜமீன் அரண்மனையில் ஃபோனோகிராமில் கேட்டபோது, நாமறிந்த நாகஸ்வர சக்கரவர்த்தி, தன் மருகப்பிள்ளையைக் கூப்பிட்டு, தன் நாகஸ்வரத்தை எடுத்து வரச்சொல்லி அதில் கோர்த்திருந்த திருமருகலாரின் மணியை அவிழ்த்துவிட்டாராம். தான் இன்னும் நடேச பிள்ளையின் மணியைக் கோர்த்துக்கொள்ளும் தகுதி பெறவில்லை என்று. அந்த நடேசப்பிள்ளையின் வாசிப்பு என்றென்றைக்கும் நாம் இழந்த ஒன்றுதானே. நாம் அறிந்த சரித்திரத்தில் நடேசபிள்ளை ஒரு நாகஸ்வர சக்ரவர்த்தியாக பதிவு பெறவில்லை. ராஜரத்தினம் பிள்ளையின் அசகாய எட்டு மணி நேர வாசிப்புகளோ நாம் கேட்க சாத்தியமா என்ன? அதை எட்டு நிமிட பதிவாக ஓடியன் என்னும் நிறுவனம் பதிவு செய்ததாம்.

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரையில் கி. ராஜநாராயணன் சொல்கிறார்: "ஒத்திகை என்ற பெயரில் முதலில் வாசித்த தோடி அனைவரையும் மெய்மறக்கச் செய்தது.

## வெங்கட் சாமிநாதன்

அதுவே "ஒகே" யாகி ஒலிப்பதிவு தொடங்கியது. இப்போது வாசித்த தோடி மற்றொரு அழகு. இன்னொன்றும் எதற்கும் இருக்கட்டும் என்று வாசித்துப் பதிவானது இன்னொரு அழகான தோடி. வெளிவந்த தோடி தான் நாம் அறிவோம். இப்படி எவ்வளவோ விடயங்கள் இல்லாமல் போய்விட்டதால் அவை இல்லாமல் ஆகிவிட்டன."

கலைவடிவின் சோகம், சங்க கால பாடல்கள் நமக்குக் கிடைக்கின்றன, அஜந்தா சுவரோவியங்கள் வாழ்கின்றன. ஆனால் சங்கீதம் அவ்வக்ஷணத்தின் காற்றோடு கலந்து விடுகிறது. நம் காலத்தின் சோகம், நடேசபிள்ளையின் அத்தினத்து வாசிப்பு பதிவாகவில்லை. ஆனால், இன்றைய "அண்டங்காக்கா கொண்டைக்காரி" தமிழ்கூறு நல்லுலகு முழுதும் வான்கூவரிலிருந்து டோக்யோ வரை உள்ள தமிழர்களுக்கு என்னேரமும் கிடைக்க சன் டிவி வழிசெய்துவிடுகிறது.

நான் சொல்ல வந்தது சங்கீதம், நாட்டியம் போன்ற துறைகளில் தமிழ் நாட்டில் தோன்றிய மாமேதைகள் சரித்திர காலத்திலிருந்து நேற்று வரை சுவடற்றுப் போய்விட்டார்கள். சோழநாடனின் ராஜரத்தினம்பிள்ளையின் வரலாற்று நூலில், 1815-1889 பந்தனைநல்லூர் வீருசாமிப் பிள்ளை தொடங்கி ஷேக் சின்ன மௌலானா, நாமக-ிரிப்பேட்டை கிருஷ்ணன் போன்ற சமகாலத்தியவர் பலர் வரை சுமார் 123 கலைஞர்கள் பட்டியலைத் தாம் சேகரிக்க முடிந்த வரை தந்துள்ளார். இவர்களில், முப்பது நாற்பதுக்களில் வாசிக்கத் தொடங்கியவர்களில் பலர் நாடாவிலோ அல்லது ஒலித்தட்டுகளிலோ பதிவு செய்யப்பட்டிருப்பார்கள். ராஜநாராயணன் சொன்ன கதை கேட்டோம். இசைக் கலைஞர்களுக்கும் சரி, ரசிகர்களுக்கும் சரி, பாடப்படும் அந்நேர சூழல், மனநிலை கலைஞரின் அந்த கணத்தில் தோன்றும் கற்பனை, ரசிகரின் ஸஹ்ருதயம் எல்லாம் சேர்ந்தது தான் அந்த கணத்தின் இசை வடிவம். ஸ்டுடியோ பதிவு காமிராவுகாக வரவழைக்கும் புன்னகை தான். சிலருக்கு இயற்கையாக, சிலருக்கு வலிந்து. உஸ்தாத் அல்லாடியா கானிடம் அவரது சரோத் வாதத்தை பதிவு செய்ய இறைஞ்சி கேட்டபோதில்லா, அவர் சொன்னது, "உங்களுக்கு ஆறிப்போன ரொட்டிதான் பிடிக்குமா? சுடச்சுடத் தர நான் இருக்கிறேனே?" என்பாராம்.

அந்த ராஜரத்தினம் பிள்ளை என்னும் மேதையின் ஒரு பரிமாண கோட்டுப் படம் தான் வரலாற்றில் சாத்தியம். அவர் வாசிப்பைப் பற்றி, ஏன் பாட்டைப் பற்றி என்ன எழுத்துக்களால் எழுதி உணர்த்திவிட முடியும்? எந்த உன்னத இசைபற்றியும் என்ன எழுதி விடமுடியும்? நல்ல ரசிகரும், திறமை வாய்ந்த எழுத்தாளரும், ராஜரத்தினத்தின் பரம ரசிகருமான ராஜநாராயணனே என்ன சொல்ல முடிந்தது, தன் பரவசத்தைப் பற்றி? "அது ஒரு அழகு, பின் இதுவும் வேறு ஒரு அழகு" என்று தான் சொல்ல முடிந்திருக்கிறது. சரி, சோழநாடனே என்ன சொல்கிறார்? ஒரு மாதிரிக்கு சில வரிகள்: வாய்ப்பாட்டில் கொடுக்கக்கூடிய கமகங்களை தனது பிருகாக்களில் இழைத்து புதிய மெருகுடன் வெளிவரச் செய்தார். "அரியது", "கடினம்" என்று நினைக்கும் திருப்பங்களையும் வேலைப்பாடுகளையும் விளையாட்டுப் போல் செய்து புன்முறுவலிப்பார்". சரி மொழி இங்கு உதவுவதில்லை.

ஆனால், காஞ்சிபுரம் நயினாப்பிள்ளைக்குப் பல்லவி கற்றுக் கொடுத்த அந்த பண்டாரம் ஒரு பெரிய மேதை என்பதில் சந்தேகமில்லை. கலைஞர்கள் நம் நாட்டில் அனாமதேயர்களாகத் தான் இருந்திருக்கிறார்கள். சிற்பிகளும், ஓவியர்களும், "காக்கை பாடினியார்" என்று பெயர் சூட்டவேண்டி வந்தவர்களைப் போன்ற கலைஞர்களும் தம் பதிவை விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த பதிவுகள் கூட நம் பண்டாரத்திற்கும், இளங்கோ அடிகளின் மாதவிக்கும் கிடைக்கவில்லை.

ராஜரத்தினம் பற்றி எழுதப் போய்தான் நடேசப் பிள்ளை பற்றி நமக்குத் தெரிந்தது. நயினாப்பிள்ளை பற்றி எழுதப் போய்தான் அந்த பண்டாரம் பற்றியும் நமக்குத் தெரிய வந்தது.

ராஜரத்தினம் ஒரு சிகர கலைஞன். நல்ல வேளையாக பதிவுகள் சில உள்ளன. அவரது வாழ்க்கை பற்றி அறிய முற்படும்போது, அவர் வாய்ப்பாட்டிலும் சிறந்தவர் என்று தெரிகிறது கவி காளமேகம் படத்தில். நாகஸ்வர பிருகாக்களை வாய்ப்பாட்டில் கொணர்ந்திருக்கிறாராம். நாகஸ்வரம் வாசிப்பதாக இருந்தாலும், முதலில் நன்றாக பாடத்தெரிந்திருக்க வேண்டும் என்பது ராஜரத்தினத்தின் தீர்மானம். நடேசப்பிள்ளையின் வாசிப்பை கேட்டதும், தான் இன்னும் அந்த சிகரத்திற்கு உயரவில்லை என்று அவர் உணர்ந்ததுபோல, தன் வளர்ச்சி பெற்ற காலத்தில் தான் அடைந்துள்ள சிகரம் பற்றியும் அவருக்கு பிரக்ஞை இருந்திருக்கிறது. தனக்கு என்ன உரியது என்பது பற்றியும் அதை விட்டுக்கொடுப்பதில்லை என்பதிலும் அவரிடம் கர்வம் நிறைந்த பிடிவாதம் இருந்தது. தன்னை வளர்த்த திருவாடுதுறை கோயில் போன்று இன்னம் இரண்டு கோவில் தவிர வேறு எங்கும் அவர் நின்று கொண்டு வாசிப்பதோ ஊர்வலம் வருவதோ இல்லை. மேடையில் அமர்ந்து வாசிப்பது என்பதை நாகஸ்வர வித்வான்களுக்கு உரிமையாக்கியவர் அவர். அக்கால வழமைக்கு எதிராக, நன்றாக ராஜா மாதிரி உடை உடுத்திக்கொண்டு தான் வாசிப்பார். மேலாடை இல்லாது, துண்டைக்கூட இடுப்பில் கட்டிக்கொண்டு காலில் செருப்பு இல்லாது தான் வாசித்துக்கொண்டே ஊர்வலம் வரவேண்டும் அந்நாளில். தில்லியில் விருது வாங்கச் சென்றவர் தன் அந்தஸ்துக்கேற்ற கார் வந்தால் தான் வருவேன் என்றாராம். இப்படி அனேகம் சம்பவங்கள் சொல்லப்படுகிறது. சின்ன வயதிலிருந்தே அவர் வாய்ப்பாட்டிலும், வாத்திய இசையிலும் புகழ் பெற்றவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றவர். அவர் தன் பதின-ைந்தாம் வயதில், 1913-ல் தருமபுர ஆதீனத்தில் வாசித்து மடத்து நாகஸ்வர கலைஞராகிறார். அதற்கும் முன்னிருந்தே சின்ன பக்கிரியின் வாசிப்பைக் கேட்டு தன் வாசிப்பை மாற்றிக்கொண்டதாகச் சொல்கிறார். கமகம் இல்லாமல் சுரம் சுரமாக வாசிப்பதைப் பார்த்துக் கோபம் அடைந்த திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் மூக்கில் குத்தியதைச் சொல்கிறார். அவருக்கென தனிப் பாணி, அவரே வடிவமைத்துக்கொண்ட நாகஸ்வர வாத்தியம், அவரே தன்னை ஏதோ ராஜா மாதிரி செய்துகொண்ட அலங்காரம் ("ஏதோ சமஸ்தானத்து ராஜா என்று நினைத்தேன்" என்றாராம் ஜவஹர்லால் நேரு), மகா கர்வி என்று மற்றவர் நினைத்துக் கொள்ளும் அளவு அவர் நிர்ணயித்துக்கொண்ட தன் ஆளுமையின் சுயகௌரவம் எல்லாம் அவரது ஆளுமையின் தனித்வங்கள்.




## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா வருடாந்த போட்டிகள் - 2006

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள் அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்தப் போட்டிகள்.

இடம் - St. Stephen's Pressbyterian Church , 3817 Lawrence Ave. East, Scarborough, ON (Lawrence & Markham)
காலம்- யூலை 08, 2006 - சனிக்கிழமை காலை 8.00

**விண்ணப்ப முடிவுத் திகதி யூலை 01, 2006**

மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும்
416.283.1439- திருமதி. நாமகள் சிவகுமார்
416.431.9929- திருமதி ஜெ. பூபாலசிங்கம்
416.321.5522- திரு. நா. பாலகுமார்
416.431.1060- திருமதி. சு. சுப்பிரமணியம்
416.721.9709- திரு, மா. ஜெகன்மோகன்

## இணுவில் திருவூர் ஒன்றியம் அறிவித்தல்

கனடாவாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியில் தமிழ் மொழித்திறனையும் சமய அறிவையும் வளர்க்குமுகமாக தமிழில் பேச்சு, வாசிப்பு, எழுத்து மற்றும் பண்ணிசைப் போட்டிகள் 20வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் மத்தியில் வயது அடிப்படையில் ஐந்து பிரிவுகளாக இடம் பெறவுள்ளது.

காலம் - 15.07.2006 (சனிக்கிழமை)
இடம் - St. Stephen's Presbyterian Church, 3817 Lawrence Ave East, Scarborough, ON (Lawrence & Markham)
நேரம் - காலை 9.00 மணி
மேலதிக விபரங்களுக்கு - செ. தளையசிங்கம் 416.496.9071
மு. கிருபாகரன் 416.430.0422 சோ.சிவநாயகம் 416.754.7402



**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
paramg@gmail.com
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# "SAME SIDE GOAL" - உலக கிண்ணம் 2006

இங்கிலாந்து - பராகுவே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது, விழுந்த ஒரே கோலை யாரது கணக்கில் கொண்டுவருவது என்ற விவாதம் எழுந்துள்ளது.

பிராங்ஃபேர்ட்டில் சனிக்கிழமை நடைபெற்ற 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் காப்டன் டேவிட் பெக்காம் மூன்றாவது நிமிடத்தில் அடித்த கோல், பராகுவே அணி வீரர் கார்லஸ் கமாராவின் தலையில் பட்டு "Same Side" கோலாகியது. அதனாலேயே இங்கிலாந்து வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

அணியை பழி தீர்த்துக் கொள்ளும் வண்ணம் அதனை வெல்வோம் என்று இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரம் டேவிட் பெக்கம் கூறி உள்ளது பரபரப்பை ஏற்படுத்த உள்ளது. 2002 உலகப் போட்டியின் போது இங்கிலாந்து அணியை 2 -1 என்ற கோல் கணக்கில் பிரேசில் வென்றது. அந்த போட்டியில் நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு பிரேசிலின் கால்பந்து கதாநாயகன் ரொனால்டினோ வெளியேற்றப்பட்டார். 10 வீரர்களோடு விளையாடிய பிரேசில் அணி அந்தப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், அதை"Same Side" கோல் எனக் கூறமுடியாது என்கிறது விதிமுறை. அதாவது, தாக்கும் அணியில் உள்ள வீரர்களில் யார் கடைசியாகப் பந்தைத் தள்ளினாரோ அவரது கணக்கலேயே அந்த கோல் சேரும் என்கிறது.

இதையடுத்து அதன் வீடியோ பதிவை ஆய்வு செய்தது சர்வதேச சம்மேளத்தின் தொழில்நுட்பக் குழு. அதனடிப்படையில் அந்த கோல் பெக்காமின் கணக்கிலேயே சேரும் எனத் தெரிவித்துள்ளது.

தவிர, அந்த கோல் அடிக்கப்பட்ட நேரத்தையும் ஆய்வு செய்த குழு, நாலாவது நிமிடத்திலேயே அந்த நிகழ்வு நடைபெற்றது எனத் தெரிவித்துள்ளது. சில நேரங்களில் ஓர் அணி வீரர் பந்தைப் பாதுகாப்பதற்காக தனது கோல் கீப்பருக்குத் தள்ளும் போது, பந்து திடீரென திசை மாறி கோலாவது உண்டு. அம்மாதிரி அப்பட்டமாக தெரிந்தால் மட்டுமே Same Side Goal எனக் கூறப்படும். மற்றும்படி மற்றொரு வீரர் பந்தைத் தள்ளும் போது அது எதரணி வீரரின் தலையிலோ அல்லது காலிலோ பட்டு கோலாகும்பட்சத்தில், யார் கடைசியாக பந்தைத் தொட்டாரே அவரது கணக்கிலேயே சேர்க்கப்படும். Same Side கோலைக் குறைப்பதற்கான முயற்சியே இது.

## பிரேசில்லை வெல்லுவோம் "பெக்கம்"

உலககிண்ணத்தை முன்னிட்டு ஜேர்மனி விழாக் கோலம் பூண்டுள்ளது. ஒரு மாதம் நடைபெறப் போகும் உலகக்கோப்பை கால்பந்து திருவிழாவால் நாடு முழுவதும் கடந்த வாரமே களை கட்டத் தொடங்கவிட்டது. 2006 போட்டியிலும் கோப்பையை வெல்லப் போகும் அணி என்று கணிக்கப்பட்டுள்ள பிரேசில் அணி பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. அதே சமயம் இங்கிலாந்து அணியும் மிகுந்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய வண்ணம் களத்தில் குதிக்கிறது. இதற்கிடையில் பிரேசில் ரொனால்டினோ மற்றும் ராபர் கார்லோஸ் உடன் ரியல் மேட்ரிட்டில் பெக்காம் விளையாடி உள்ளார். இங்கிலாந்து அணி மிகச் சிறப்பான முறையில் பயிற்சி எடுத்துள்ள நிலையில் ஜேர்மனியில் இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெறும் என்று நம்பப்படுகிறது.

'எங்கள் அணியின் ஒவ்வொரு வீரரும் உலகின் மிகச்சிறந்த அணியாக இங்கிலாந்து வரவேண்டும் என்றே விரும்புகின்றனர். 2002 போட்டிகளில் நாங்கள் பிரேசில் அணிக்கு நெருக்கடி கொடுத்தோம். நான் அந்த காலங்களில் ஐந்து பிரேசில் அணி வீரர்களுடன் தொடர்ந்து விளையாடி வந்திருக்கிறேன். அவர்கள் உலகிலேயே கால்பந்தாட்ட நுணுக்கங்களை அதிகம் கற்ற வீரர்கள் என்கிறார் 31வயது பெக்காம். 2002 உலக போட்டிகளுக்குப் பிறகு பெக்காம் மேட்ரிட் கிளப்புகளில் பிரேசிலின் சில வீரர்களோடு விளையாடி உள்ளார். இங்கிலாந்து மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளுக்கிடையேயும் சுமூக உறவு இருந்துள்ளது. இங்லாந்து அணியில் பல மாற்றங்கள் அணியின் வெற்றியைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டுள்ளது. 2006 முதல்போட்டியில் இங்கிலாந்து அணி பி பிரிவில் பாரகுவே அணியை 1 - 0 என்ற கோல் அடிப்படையில் வென்றது. எங்கள் அணி மிகச் சிறந்த அணி மிகவும் நம்பிக்கை மிக்க அணி என்று பெக்காம் தெரிவித்துள்ளார்.

## செக்குடியரசின் முதல் பலப் பரீட்சை

உலககோப்பை போட்டியின் 'இ' பிரிவு லீக் ஆட்டத்தில் அமெரிக்கா - செக்குடியரசீ இத்தாலி, கானா அணிகள் விளையாடுகின்றன. இத்தாலி, கானா அவற்றில் இத்தாலி மூன்றுமுறை உலகக் கோப்பையை வென்றுள்ள

# விளையாட்டுத் தகவல்கள் 192

அனுபவம் உடையது. அதே சமயம் கானா முதன்முறையாக உலகக் கோப்பையில் விளையாடுகிறது. இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இப்போட்டி, இரண்டாம் கட்டத்துக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இருந்தாலும் அமெரிக்காவைக் காட்டிலும் ஒருமுறை உலகக் கோப்பை போட்டியில் விளையாடிய அனுபவம் கொண்ட செக்.குடியரசு, இந்த ஆட்டத்தை எளிதில் எடுத்துக் கொள்ள முடியாது. செக். குடியரசுக்கு இது எட்டாவது உலகக் கோப்பை போட்டி. தனிநாடாக சுதந்திரம் அடைந்தபிறகு அந்த அணி பங்கேற்கும் முதலாவது உலகக்கோப்பை போட்டி இது. 1990 உலகக் கோப்பை போட்டியில் அமெரிக்காவை 5 - 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது செக் குடியரசு. அதே சமயம் இம்முறை உலகக் கோப்பை போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெறுவதற்கு அமெரிக்கா, மேற்கொண்ட முயற்சிகள், பெற்ற வெற்றிகள் செக்.குடியரசுக்கு எச்சரிக்கை அளிக்கும் விதமாக உள்ளது. மிலான் பரோஸைத் தவிர மற்றைய வீரர்கள் அனைவரும் காயத்திலிருந்து விடுபட்டுள்ளது செக்.குடியரசுக்கு கூடுதல் வலிமையும் உள்ளது. இருந்தாலும் அணியில் பலர் அதிக வயதுடையவர்கள் என்ற சர்ச்சையும் நிலவுகிறது. அதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்பது போல பேசியுள்ளார் அந்த அணியின் நட்சத்திர வீரர் ஜேன் கோல்லர். "முதலாவது லீக் ஆட்டத்தின் முடிவைப் பொறுத்தே இப் போட்டியின் வெற்றி வாய்ப்பு இருக்கும். அதை வீரர்கள் அவைரும் உணர்ந்துள்ளனர். அணியிலும் சிறந்த வீரர்களே உள்ளனர். நிச்சயம் வெற்றி பெறுவோம்" என நம்பிக்கை தெரிவித்துள்ளார் 33 வயது ஸ்டிரைக்கர் ஜேன் கோல்லர்.

## இத்தாலிக்குப் பலப்பரீட்சை

உலகின் மிகச்சிறந்த கால்பந்து அணிகளில் ஒன்றான இத்தாலி இந்த முறையாவது உலகக் கோப்பையை வெல்லுமா என்ற கேள்வி கால்பந்து ரசிகர்களிடம் ஏகமனதாக எழுந்துள்ளது. முதல் ஆட்டத்தில் அந்த அணி கானாவை எதிர்த்து களம் காண்கிறது. இத்தாலியின் ஒட்டுமொத்த நம்பிக்கை அந்த அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் லூக்கா டோனியிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்களத்தில் டோனி மிகச்சிறந்த வீரர்.

உலகின் பிரசித்திபெற்ற கிளப்புகளில் ஒன்றான ஃபியாரன்டினாவின் 47 ஆண்டுகால வரலாற்றில் ஒரே சீசனில் 30க்கும் அதிகமான கோல்களை அடித்த சிறப்புக்குரியவர் டோனி. "இது போன்ற மிகப்பெரிய போட்டியில் கலந்து கொள்வது எனக்கு இன்ப அதிர்ச்சி தருகிறது. முழுப் பயிற்சி ஒன்றே உழைப்புக்கான பலனைத்தரும்" என்கிறார் டோனி.

அணியின் தற்காப்பு ஆட்டக்காரர் கிளான்லூக்கா, மிட்ஃபீல்டர் ஜெனூரோ கட்டுசோ ஆகியோர் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாமல் போயுள்ளது. பயிற்சியாளர் மார்செலோ லிப்பிஸின் இறுதிப்போட்டிக்கு இத்தாலியை அழைத்துச் செல்லும் கனவை லேசாக அசைத்துப் பார்த்துள்ளது. மற்றொரு தற்காப்பு ஆட்டக்காரர் அலெஸ்சாண்ட்ரோ நெஸ்டோ முழுஉடல் தகுதி பெற்றிருந்தாலும் முக்கியமான முன்கள ஆட்டக்காரர் டோட்டி முழங்கால் காயம் காரணமாக ஆடமுடியாமல் போய் உள்ளது பலவீனமாகத் தெரிகிறது. அதேசமயம் 'கன்னி முயற்சி'யில் குதித்துள்ள கானா முழு நம்பிக்கையோடு களம் இறங்க உள்ளது. "இத்தாலி அணிக்கு நாங்கள் நெருக்கடி கொடுப்போம். இது எங்களுக்கு முதல் முயற்சி. இத்தாலியில் அணி வலுவுள்ள அணிதான். இத்தாலியின் முன்கள வீரர்களை எங்கள் தற்காப்பு ஆட்டக்காரர்கள் தைரியமாக எதிர்கொள்வார்கள்" என்று கானாவின் பயிற்சியாளர் ரோடோமிர் டுஜ்கோவிக் தெரிவித்துள்ளார்.

## துடுப்பாட்டம்

ஐ.சி.சி ரெஸ்ற் போட்டிக்கான புள்ளிகள் பட்டியலில் இலங்கை அணி முன்னேற்றம்

இங்கிலாந்து நடைபெற்ற ரெஸ்ற் போட்டியில் விளையாடிய இலங்கை அணி 1 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணியுடன் டிரா செய்ததால் ஐ.சி.சி ரெஸ்ற் போட்டிக்கான புள்ளிகள் பட்டியலில் முன்னேறி நியூசிலாந்துடன் சமநிலையில் உள்ளது. இலங்கை அணி இங்கிலாந்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கு மூன்று ரெஸ்ற் போட்டி தொடரில் விளையாடியது. லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற் முதல் ரெஸ்ற் டிராவில் முடிவடைந்தது. எட்பாஸ்டனில் நடந்த இரண்டாவது ரெஸ்ரில் இங்கிலாந்து அணி ஆறுவிக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
டிரென்ட் பிரிட்ஜில் நடைபெற்ற கடைசி மற்றும்

**எஸ். கணேஷ்**

மூன்றாவது ரெஸ்ரில் இலங்கை அணி 134 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இங்கிலாந்துக்கு பதிலடி தந்ததோடு, ரெஸ்ற் தொடரையும் 1 - 1 என்ற சமநிலை வெற்றியில் முடிந்துள்ளது. இந்த ரெஸ்ரை சமநிலை செய்ததன் மூலம் இரண்டு புள்ளிகளை கைப்பற்றி இலங்கை அணி எல்.ஜி.ஐ.சி.சி ரெஸ்ற் சாம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் ஆறாவது இடத்துக்கு முன்னேறியது. மொத்தம் 97 புள்ளிகள் பெற்று நியூசிலாந்து அணியை பின்னுக்கு தள்ளியுள்ளது. நியூசிலாந்து அணியும் 97 புள்ளிகள் பெற்று ஏழாவது இடத்தை பிடித்து வருகிறது. இந்த பட்டியலில் அவுஸ்திரேலியா அணி 131 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடிக்க, இங்கிலாந்து அணி 112 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தை பிடிக்கிறது. இதைவிட ஒரு புள்ளி குறைவாக அதாவது 111 புள்ளிகள் பெற்றுள்ள இந்திய அணி மூன்றாவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் அணி 109 புள்ளிகள் பெற்று நாலாவது இடமும், தென்னாபிரிக்கா அணி 101 புள்ளிகள் பெற்று ஐந்தாவது இடமும் பிடித்து வருகின்றன. 72 புள்ளிகள் பெற்றுள்ள மேற்கு இந்திய தீவுகள் அணி எட்டாவது இடமும், 27 புள்ளிகள் பெற்றுள்ள ஜிம்பாப்வே அணி ஒன்பதாவது இடமும், மூன்று புள்ளிகள் மட்டுமே பெற்றுள்ள பங்களாதேஷ் அணி பத்தாவது இடமும் பிடிக்கின்றன.

## FRENCH OPEN 2006 - ரெனிஸ்

பிரெஞ் ஒபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை நடப்பு சாம்பியன் ரஃபேல் நடால் வென்றார். ஞாயிற்றுக்கிழமை பாரீஸில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அவர் உலகின் முதல் நிலை ஆட்டக்காரர் ரோஜர் பெடரை 1-6,6-1,6-4,7-6 செட் கணக்கில் வென்றார். பெடரருக்கு அதிர்ச்சித் தோல்வியை அளித்தார் நடால்.








# புதிய பழைய வீடுகளின் ஒப்பீடுகள்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

## தொடர்-2 3 0

ரொறொன்ரோ Real Estate Board 1920 ஆண்டில் நிறுவப்பட்டது. வீடு விற்றல், வாங்கல் போன்ற Real Estate சம்பந்தப்பட்ட தகவல்கள் பொதுவாக இந்த சபை (Board) இனால் பராமரிக்கப்படுகின்றது. இந்த சபை வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக மத்திய பகுதியில் வீட்டின் விலை அதிகமாகக் காணப்படும். இந்த சபையின் பரப்பளவு காலத்துடன் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. ரொறொன்ரோ பெரும்பாகத்தின் பல பாகங்களிற்கும் மக்கள் வாழச்செல்வதனால் Toronto Real Estate Board இன் பகுதியும் விரிவடைகின்றது.

மத்திய பகுதியின் அளவு அதிகரிக்கப்பட முடியாது. மற்றய மூன்று பகுதிகள் மட்டுமே விரிவடைந்து செல்கின்றது. கூடியளவு மக்கள் ஒன்ராரியோவிற்கு வருவதாலும் ரொறொன்ரோவின் மத்திய பகுதியின் அளவு குறிப்பிட்டளவாகவே காணப்படுவதால், மற்றய பகுதிகளிலேயே மக்கள் வாழவேண்டிய சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. பொதுவாக ஒன்ராரியோவிற்கு வருடாவருடம் 100,000 இற்கு மேற்பட்ட மக்கள் குடியேறுகிறார்கள்.

இதனால் பொதுவாக மத்திய பகுதியிலுள்ள வீடுகளின் விலை அதிகரிக்கவே சந்தர்ப்பம் உண்டு. அத்துடன் ரொறொன்ரோ பகுதியிலும் (கிழக்கே - Pickering வரையும் வடக்கே - Steeles Ave., மேற்கே Highway 427வரையும் உள்ள ரொறொன்ரோ பகுதியிலுள்ள நிலத்தின் அளவு எப்பொழுதும் குறையவே முடியாது. ஏனெனில் புதிதாக இந்த நாட்டில் ஒன்ராரியோவில் குடியமரவிருக்கும் குடிவரவாளர்கள், பொதுவான வசதிகளைக் கருத்தில் கொண்டு இந்த பகுதியிலேயே வாழ விரும்புவார்கள் அல்லது விரும்புகின்றார்கள்.

May 2006 இல், Toronto Real Estate Board இல் பதியப்பட்ட விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 9,434. இந்த எண்ணிக்கையானது கடந்த 86 வருட சரித்திரத்திலேயே ஆகக்கூடிய எண்ணிக்கை என இந்த சபையின் இன்றைய தலைவர் அறிவித்துள்ளார்.

இது கடந்த வருடத்தின் மே மாதத்தைவிட 2% அதிகமாகவும் காணப்படுகின்றது. இந்தப்பகுதியில் மே 2006 ஆம் மாதத்தின் சராசரி வீட்டு விலை $365,537 ஆகவும் காணப்படுகின்றது. 1989இல் ஏற்பட்ட விலை இறக்கத்திற்கு முந்திய ஆகக்கூடிய சராசரி வீட்டு விலை அண்ணளவாக $289,000 ஆகும்.

குறிப்பு - குறிப்பிட்ட மத்திய பகுதியில் காணப்படும், 14 மாவட்டங்களில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1739, கிழக்குப் பகுதியிலுள்ள 21 மாவட்டங்களில் விற்கப்பட்ட வீடுகள் 2,293, மேற்குபகுதியிலுள்ள 28 மாவட்டங்களினால் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 3,504 மற்றும் வடக்கேயுள்ளி 23 மாவட்டங்களில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. 1898 விற்கப்பட்டுள்ளன. (மொத்த மாவட்டங்கள் 86, விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 9,434 ஆகும். (பொதுவாக மத்திய பகுதியின் சராசரி விலை அதிகமாகவே காணப்படும்.) (மாவட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.)

CMHC பிராந்திய பொருளாதாரப்பொறுப்பாளர் Ted Tsiakopoules அறிக்கையின் படி ரொறொன்ரோ பெரும்பாகத்தின் வீட்டு வியாபாரம் ஆரோக்கியமாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

### புதிய வீடு / பழைய வீடு

இன்றைய காலகட்டத்தில் எம்மவர் மட்டுமல்லாது வேறு இனத்தவர்களும் புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளையே வாங்குவதில் அதிக நாட்டம் கொண்டுள்ளார்கள். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வீட்டின் விலையை அவதானிக்கும் போது புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளின் விலை அதிகமாகவே காணப்படுகின்றது. மேலும் அடுத்த வருடத்தில் சக்தியை சேமிப்பதற்கான வீடுகளையே கட்டவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் அடுத்த வருடத்தில் கட்டப்பட இருக்கும் புதிய வீடுகளின் விலை மேலும் அதிகரிக்கலாம்.

அப்படியிருந்தும், புதிய வீடுகளையே மக்கள் வாங்குகிறார்கள். புதிய வீடுகளை வாங்குவதற்குரிய காரணத்தைக்கேட்டபோது, கீழுள்ள காரணங்களை முன்னைத்துள்ளார்கள்.

### காரணங்கள்

1. தமக்கு விருப்பமான வீட்டை தெரிவுசெய்ய முடியும். அத்துடன் நிறங்களைத் தெரிவு செய்தல் நிலப்படுக்கைகளை தெரிவுசெய்தல் போன்றவை.
2. தமக்கு விருப்பமான எல்லோராலும் மதிக்கப்படும் வீடுகட்டும் நிறுவனத்தை தெரிவு செய்யமுடியும்.
3. தமக்கு எப்படியான வீடு கிடைக்கும் என முன்பே அறியக்கூடியதாக உள்ளது.
4. புதிய தொழில்நுட்ப உத்திகளை (Techniques) பாவித்த வீடுகளைப் பெறலாம்.
5. காலத்திற்கேற்ப வீட்டின் Design ஐ பெறக்கூடியதாக உள்ளது.
6. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள், கட்டிடத் தேவைகளிற்காகப் உபயோகப்படுகின்றது. இதனால் பல வழிகளிலும் நன்மையே கிடைக்கின்றது. உதாரணமாக புதுவிதமான Electrical Light fixtures பாவிக்கப்படுகின்றது.
7. புதிய வீடுகளிற்கு பாவிக்கப்படும் பொருட்களிற்குரிய Maintenance இலகுவானது.
8. பாவிக்கப்படும் சக்தி குறைவாக இருக்கும். (Example: High Efficiency furnace)
9. வீட்டின் உட்பகுதியிலுள்ள காற்றின் சுத்தத்தன்மை நல்லதாகக் காணப்படலாம்.
10. பாதுகாப்பு அதிகமாக இருக்கும்.
11. வீடு கட்டும் நிறுவனங்கள் போதியளவு Warranty வழங்குகின்றன.
12. பொதுவாக புதிய வீடு வாங்குவதற்கும் வீட்டிற்குள் குடிபுகுவதற்குமிடையில் குறிப்பிட்ட கால இடவெளி இருப்பதால் பொருளாதார நிலைமை ஓரளவு திட்டமிடக்கூடியதாக இருக்கும்.






# தந்தையர் புகழ் மாலை

தந்தையர் புகழ்மாலை 1

- அருட்கவி ஞானகணேசன்

பல்லவி

தந்தையர் புகழ்தனைப் பாடிடுவோம் - எங்கள்
தங்கமாம் அவர்பெயர் போற்றிடுவோம்
(தந்தையர்)

அனுபல்லவி

சிந்தைகவர்ந்திடும் சீலர் அவர் - எம்மேற்
சிரத்தையெடுத்திடும் செம்மல் அவர்
(தந்தையர்)

சரணம்

நேசமும் பாசமும் கொண்டவர்தான் - தந்தை
ஆசையாய் கேட்பவை அளிப்பவர்தான்
ஆசானெக்கவர் எவ்விடத்தும் - எங்கள்
அன்னையர் காட்டிய தெய்வமவர்
(தந்தையர்)

அவைகளில் முந்தியே நாமிருக்க - அவர்
அடைந்திட்ட துயரெல்லாம் நாமறிவோம்
வறுமையை நாமென்றும் அறியாமல் - எமை
வளர்த்திட ஆயிரம் பணிசெய்தார்.
(தந்தையர்)

என்மனக்கோவிலில் உறையுமப்பா - நீங்கள்
மண்ணினில் நாம்காணும் தெய்வமன்றோ!
நல்லதே எண்ணிடும் எங்களப்பா - நீங்கள்
பல்லாண்டு வாழ்க பார்போற்றிடவே.
(தந்தையர்)



தந்தையர் புகழ்மாலை 2

- அருட்கவி ஞானகணேசன்

பல்லவி

தந்தையர் புகழ்பாடிடநீர் தாவியோடி வாருங்கடி
தரணியெல்லா மவர்புகழை ஏற்றிநீங்க பாடுங்கடி
(தந்தையர்)

அனுபல்லவி

பைந்தமிழில் பாடவைத்த பண்டிதனும் அவர்தான்டி
எந்தநாளும் எமைக்காக்கும் இறையவனும் அவர்தான்டி
(தந்தையர்)

சரணம்

எந்தமண்ணில் வாழ்ந்தபோதும் சொந்தமொழி முதன்மையென்பார்
செந்தமிழை அனுதினமும் எந்தன்நாவில் தவளச்செய்வார்
பல்லவியும் சரணங்களும் முன்னேநின்று பாடச்சொல்லி
துல்லியமாய்ச் செந்தமிழை துலக்குகின்ற வித்தகனார்
(தந்தையர்)

கலையுடனே கலாசாரம் கண்ணியமாய்க் காத்துவந்தால்
மலையைப்போலுயரு மெங்கள் மகிமையென் றெடுத்துரைப்பார்
பட்டிதொட்டி எங்கணுமே பைந்தமிழ்நாம் கேட்டிடவே
சிட்டுக்கள்நாம் உழைக்கவேண்டும் என்றுமவர் புகட்டிடுவார்
(தந்தையர்)

ஏணிபோலஎம்வாழ்வில் ஏறிநாங்கள் உயர்ந்திடவே
ஓடியோடி ஓயாது உழைத்துக் காக்குமெங்கள் தந்தை
காலமுள்ள காலம்வரை காலைத்தொட்டு வணங்கியவர்
களிப்புடனே வாழ்ந்திடவே கூடிச்சேர்ந்து வாழ்த்துங்கடி.
(தந்தையர்)


18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 175

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ |
| | ■ | | | 4 | ■ | | ■ |
| | ■ | 5 | | ■ | 6 | | |
| 7 | | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | | | | | 8 |
| ■ | 9 | 10 | ■ | ■ | ■ | ■ | 11 |
| 12 | | | | | | | ■ |

**இட - வல**

1. ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாத ஐரோப்பிய நாடு
4. நடனம் (வல-இட)
5. அறிவு
6. கூட்டம்
7. அன்னை
8. மனிதரால் கட்டப்பட்டது (வல - இட)
9. திட்டு
12. பத்திற்கு மேற்பட்ட நாடுகளில் ஒரே நாளில் நடந்த தமிழரின் எழுச்சி

**மேல் - கீழ்**

1. உறவினர்
2. வரலாறு
3. பிரகாசி
5. போதை தருவது (கீழ்-மேல்)
6. நீர் சேமிப்புக்கலம்
9. பெரிய குளம்
10. பாரம்
11. அம்மன் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | தி | ம | ம் | ■ | து | த் | கூ |
| து | ■ | றி | த | ■ | ல | ■ | டா |
| வா | ழை | ■ | மு | ■ | க் | ■ | ர |
| ர் | தா | ■ | அ | ங் | கு | ல | ம் |
| ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| ம் | ட | ட் | கூ | ■ | அ | ப் | பு |
| ல | ■ | ■ | ட் | ■ | ல | ■ | ட் |
| கூ | ப் | பி | டு | ■ | கு | ட் | டு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் June 28, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**174இல் வெற்றி பெற்றோர்**
1) S. Karthiga, Mississauga
2) M. Parathan, Donmills


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]


*அன்புக்குரிய வாசகர்களுக்கு!*

*முத்துராஜாவின் 60 கவிதைகள் அடங்கிய "சுனாமி" எனும் கவிதைத் தொகுப்பு விரைவில் உங்களுக்குக் கிடைக்க உள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.*

## பிரபஞ்சம்

சூரியனே
நீ நினைத்திருந்தால்
கடல் காற்றிலும் வீரியம் கொண்ட
போர்ப்படையைத் திரட்டி
வாள் வீசி வேல் எறிந்து
தசை நரம்புகளை உரமாக்கி
கோதுமை வயல்களை
வளமாக்கி இருக்கலாம்

மூசிவரும் காட்டுத் தீயினால் சுட்டெரித்து
சாம்பலைக் காற்றில் கலந்திருக்கலாம்

இறுதிக் கணத்தில் என்றாலும்
தோளிற் காவிச்சென்ற சிலுவைக்
கட்டையால்
எதிரிகளை அழித்திருக்கலாம்


ஆனால்
இந்த உருண்டைக் கல்லில் இரத்த
உளியால்
நீ பொறித்து வைத்த
'பொறுமை'
எனும் மூன்று எழுத்தின் அளவிலாப்
பெறுமதியை
புரிந்து கொள்ளாத இந்த நீரோட்டத்தைத்
தூய்மைப்படுத்த
உன்னைப்போல் இனி யார் பிறப்பார்?



முத்துராஜா


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12
*Professional Photographer* - **கதிர்**- 416-750-8118



2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough

# எமக்கென்றோர் சினிமா

சினிமா ஒரு கலை வடிவம் மட்டுமல்ல பொதுசன ஈர்ப்பு ஊடகமுங்கூட. ஒவ்வொரு இனமக்களும் தமக்குத்தமக்கென தனித்துவமான சினிமாவை வளர்த்து வருகிறார்கள். அதில் தமது மக்களின் அபிலாசைகளை, பிரச்சனைகளை, கதைகளை, நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளை, சமூக சீர்சிருத்தங்களை எல்லாவற்றுக்குமான விமர்சனங்களை அவர்கள் அலசுகிறார்கள். ஈழத்தமிழர் நாங்கள் மட்டும் அடுத்தவர் சினிமாவில் போதை கொண்டிருக்கிறோம். அதனால் எமது படைப்பாளிகளிடமிருந்து சினிமா வரவில்லை என்பதல்ல இதன் கருத்து, அது வளரவில்லை என்பதுதான். எமது சினிமாக்களில் என்ன குறை? எமது மக்களைக் கட்டிப்போட்டு கண்ணீரில் மிதக்க வைத்துக்கொண்டிருக்கும் தொலைக் காட்சித் தொடர்களிலும்பார்க்க எமது முயற்சிகள் தரக்குறைவானதல்ல. கிழமைக்கு 50 சதப்படி எண்ணிக்கை தெரியாத எத்தனையோ கிழமைகளுக்கு நீளும் ஒவ்வொரு தொடருக்கும் ஆகும் செலவைவிட இது கூடுதலானதல்ல. எவரோ பிரச்சனைகளை எமதாக உருவகித்து காசுகொடுத்துக் கண்ணீர்விடும் எம்மக்கள் சொந்தப் பிரச்சனைகளை அலசிட எமது படைப்பாளிகளுக்கு வழியமைத்துக் கொடுக்கிறார்களில்லையே!

இப்போது இங்கு திரையிடப்படும் ஈழத்துத்தமிழ்ப்படங்கள் கலியாணவீடு, பிறந்தநாளுக்கு அழைப்பில் வருவதுபோல் அழைப்பால் வரவழைக்கப்பட்ட கூட்டத்தை பெருமளவில் கொண்டதாகவே இருக்கிறது. அது மாறவேண்டும். வருந்தி அழைக்காமல் தானாய் தேடிக்கூடும் இரசிகர்களைக் கொண்டதாக மாறவேண்டும். அதற்கு எமது படைப்புகள் தரமாய் இருக்கவேண்டும். எமது தமிழர்களிடம் போய்ச்சேர வழிசெய்யவேண்டும். இதற்கு எமது சினிமாமுயற்சிகளையும் சினிமா ஆர்வலர்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவர, மக்களை சென்றடைய எமக்கானதொரு சினிமா சஞ்சிகை தேவை! இதை இங்கு வெளிவரும் "சினித்திரன்" சஞ்சிகை செய்துவருகின்றதெனினும், இது மக்கள் எல்லோருக்கும் போய்ச் சேரக்கூடியதாய் அதிகதொகையில் அச்சாவதாய் தெரியவில்லை. எனினும் இது அச்சாகுந்தொகை அதிகரிக்க சினிமா தயாரிப்பாளர்கள், ஆர்வலர்கள் அனுசரணை வழங்கவேண்டும். அடுத்து கனேடிய தமிழ்த்திரைப்பட வளர்ச்சியின் அத்திவாரமாகவும், கனேடிய ஈழத்தமிழ் ஆர்வலர்களை ஒன்றிணைக்கவும், வழிகாட்டவும் ஆதரவளிக்கவும், ஒத்துழைப்பு பெறவும், தயாரிப்பை சிக்கனமாக்கவும், ஒன்றுபட்ட உதவியுடன் படைப்பை தரமானதாக்கவும், இவை எல்லாவற்றுக்கும் ஒரு நலன்செய் சினிமா அமைப்பொன்று தேவை!

இப்படி ஒரு அமைப்பை உருவாக்க பலரும் பலவருடங்களாக மனத்தளவில் ஆதங்கப்பட்டிருக்கிறார்கள். சிலரோ எல்லோரையும் சேர்க்கவேண்டும் என்ற பரந்த மனப்பான்மை இல்லாது தானும் தன் அபிமானிகள் எனச் சிலரையும் சேர்ந்து ஏதோ ஒப்புக்குக் கூடி பரவசப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இதேபாதையில் தனித்தனிக் குழுவாக கூடிப் பரவசப்பட ஆயத்தம் செய்கிறார்கள். இத்தகைய தனிக்குழு ஒன்றுகூடல்களைவிட்டு எல்லா கனேடிய தமிழ்சினிமா ஆர்வலர்களையும் ஓரணியில் சேர்த்துக்கொள்வது எப்போது? பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதுதான் இப்போதய கேள்வி! இது யாராய் இருந்தாலும் இந்த முயற்ச்சியை செய்வதில் இன்னும் தாமதிக்கக்கூடாது. ஏனெனில் கனடாவில் ஈழத்துத் தமிழர்களின் சினிமா முயற்சி இப்போது கூர்மையான முனைப்பாக கனிந்திருக்கிறது. அதற்காக அவசரப்படவும் கூடாது. ஏனெனில் அது வெண்ணெய் திரள்கையில் தாழியை உடைத்த கதையாக முடிந்துவிடவுங்கூடும். நிதானமே பிரதானம். சங்கம் ஆரம்பிக்க பிரயத்தனப்படுவோருக்கு ஒரு வேண்டுகோள். தயவுசெய்து ஆர்வலர் எல்லோரையும் அரவணைப்பதாயும் ஆதரிப்பதாயும் இருக்கக்கூடியதாக சினிமா சங்கத்தை நிறுவ முனையுங்கள்.

**- அருண் -**

அண்மையில் இத்தகையதோர் திரைப்படச்சங்கம் அமைக்கும் நோக்கோடு கூட்டப்பட்ட ஆவர்வலர்களின் ஆலோசனைக் கூட்டத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டு அங்கு சென்றிருந்தேன். கனேடிய தமிழ் சினிமா ஆர்வலர் பலர் வந்திருந்தனர். பலர் சமூகமளித்திருக்கவில்லை. எல்லோருக்குமே வாய்மொழியாகவே தொலைபேசியில் அழைப்பு விடுத்திருந்தார்கள்.

ஈழத்து பழம்பெரும் நடிகரும் இயக்குனருமான ரகுநாதன் அவர்கள் பிரதம அபிமானியாக கலந்து கொண்டிருந்தார்.

கனடாவில் தமிழ் திரைப்பட முன்னோடிகள், ஆர்வலர்கள் என இருக்கும் 99%-மானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக அமைப்பாளர்கள் சொல்லிக்கொண்டார்கள். இருந்தும் கூட்டம் முடிந்தபின் பலருடன் கதைத்தபோதும், பின் பலரை தொலைபேசியில் அழைத்துக் கேட்டபோதும் பலர் தவறவிடப்பட்டார்கள் என்பது தெரியவந்தது. இந்தக் கூட்டம் குறுகிய கால அவகாசத்தில் நடத்தப்பட்டதால் பலர் கலந்துகொள்ள வாய்ப்பாய் அமையவில்லை என்பதுடன் பலரும் அழைப்பில் தவறவிடப்பட்டிருப்பதும் நேர்ந்துவிட்டது. பொதுவாக இத்தகைய ஆலோசனைக்கூட்டங்கள் கூடுகையில் மக்கள் தொடர்பு ஊடகங்கள்மூலம் திறந்த அறிவிப்பை அதுவும் நன்கு கால அவகாசத்துடன் கூடியதாக அறிவிப்பதே சாலச்சிறந்தது. அக்கூட்டத்தில் இதனைக் கேட்டபோது அதன் அமைப்பாளர் ஆட்களின் தொகை கூடினால் குழப்பமும் கூடும் எனப் பதிலளித்தது சரியான நோக்கம் கொண்டதை உறுதிசெய்யவில்லை. இத்தகைய அமைப்பின் முக்கிய நோக்கம் ஆங்காங்கே சிதறிப்போயிருக்கும் ஆர்வலர் அனைவரையும் இணைப்பதே. எவருக்கும் பாதகமில்லாது எல்லோருக்குமே நல்லதுசெய்ய எண்ணும்போது குழப்ப எவர் வருவார்கள்? ஆதலால் அந்த அமர்வின் முடிவில் இன்னொரு அமர்வுக்கு முடிந்தளவு அதிக ஆர்வலர்களை அழைத்துவர ஐவர் முன்வந்தார்கள். அது ஆரோக்கியமானதே. அந்த ஆர்வலர் கூடலின் வேளை, இடம் என்பன சகல பத்திரிகையிலும் அறிவிக்கப்படவுள்ளது.

இப்படி உருவாக்கப்படும் திரைப்படச் சங்கம் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி எழுவது இயல்பே. அதற்கு பதில் அளிப்பதும் ஆர்வலர் வரவை அதிகரிக்கும் என எண்ணுகின்றேன். இவ்வமைப்பு என்ன செய்யும் என்ன செய்வதை தவிர்க்கும் என்பது யாவருமே அறியவேண்டியதுதான். பொதுவாகச் சொல்லப்போனால் இது திரைப்பட ஆர்வலர்களுக்கு அனுசரணையாக இருக்குமேயல்லாமல் அவர்களைக் கட்டுப்படுத்தாது. வழிகாட்டியாக இருக்குமேயல்லாமல் குந்தகம் செய்யாது. படைப்பு வெளிவர முடிந்தளவு உதவுமேயல்லாது ஆர்வலர்களின் வெளிப்பாட்டுச்சுதந்திரத்தில் தலையிடாது.

பொதுவாக இங்கு ஒரு திரைப்படம் தயாரிக்கப்படுகையில் பல சிக்கல்கள் இடையூறுகள் ஏற்படுவதுண்டு. இவற்றை தீர்க்க அல்லது தவிர்க்க அல்லது ஒத்தாசை செய்ய எம்மிடையே அமைப்புகளில்லை. உதாரணமாக இங்கு திரைப் படம் எடுக்கின்றபோது காட்சி அமைப்புக்கு ஏற்ற இடத்தில் படமாக்க அரச அனுமதி பெறவேண்டியிருக்கும். இதைப் பெற்றுக்கொள்ள தனியாளாய் சென்று பெறுவதிலும் இத்தகைய அமைப்பினூடாக சென்றால் அனுமதிபெறுவது இலகு.

திரைப்படம் எடுக்க வருபவர்கள் சரியான நடிகர்களையோ, தொழில் நுட்பவாளர்களையோ இவ்வமைப்பினூடகாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் எவரையும் சிபாரிசு செய்யாது. கடனுதவி, மானியம் பெறுவதற்கான வழிகளைச் சொல்லுமேயல்லாமல் பெற்றுத்தராது. ஆர்வலர்களுக்கிடையேயான பிணக்குகளை தீர்த்துக்கொள்ள சமரசம் செய்யும். ஆனால் சட்டநடவடிக்கை எடுக்காது. ஆர்வலர்களுக் கிடையேயான ஒப்பந்தங்களுக்கு சாட்சியாக இருக்கும் ஆனால் தீர்ப்புச் சொல்லாது. குறைந்த செலவில் விளம்பரங்கள் செய்ய வழி சொல்லும். ஆனால் எவரையும் சிபாரிசுசெய்யாது. ஊடக அமைப்புகளுடன் தொடர்புகொள்ள முடிந்த உதவிகள் செய்யும். ஆனால் எவரையும் சிபாரிசு செய்யாது. திரைப்பட மாளிகைக்கான காட்சி ஒழுங்குகளுக்கு உதவிசெய்தாலும் படமாளிகை உரிமையாளரை எவ்வகையிலும் நிர்ப்பந்திக்காது. இப்படிப்பல... இவற்றுள் பல அன்றைய அமர்வில் ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்டது. இன்னும் நல்ல செயற்பாடுகளை, முன்னெடுப்புகளை மேற்கொள்ள ஆர்வலர் உங்கள் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றனர்.

அதற்கு நீங்கள் அடுத்த அமர்வில் சமூகமளிக்கவேண்டும்.

திரைப்பட முயற்சிகளில் பங்குகொண்ட, பங்குகொள்ளும், பங்குபெறவுள்ள ஈழத்தமிழ் ஆர்வலர் எல்லோரும் அடுத்த அமர்வுக்கு வரழைக்கப்படுகின்றார்கள்.

இதோ அமர்வு நடைபெறும் காலம், இடம்.

காலம்: 01 - யூலை - 2006 பகல் 10 மணி முதல் மதியம் 12 வரை

இடம் : 80 Nashdane Road, Unit - 212
( Middlefield & McNicoll)

தொடர்புகளுக்கு: திவ்ஜராஜன் - (416) 832-5230
இந்திரசித்து - (416) 939-7058


சுயாதீன கலை திரைப்பட மையம் - ரொரன்ரோ - கனடா

**ஐந்தாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா - ஆவணி 2006**

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் யூலை 10 ஆம் நாள் (July 10, 2006)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி - Independent Art Film Society of Toronto
4 Castlemore Avenue, Markham, ON , Canada L6C 2B3

905-887-7457 /416-450-6833, 416-400-6406 / rathan@rogers.com, www.iafstamil.com

பொய்கை

www.poikai.com இணையதளத்தில் புதியதோர் சஞ்சிகை.
(கலை, இலக்கிய, ஆன்மீக, மருத்துவ காலாண்டு இதழ்). இவ்விணையத்தள சஞ்சிகை "பொய்கை" எனும் பெயரில் வாசக நெஞ்சங்களில் புதுமணம் பரப்ப இலக்கியப் பூக்களை அள்ளிவருகிறது. இந்த இதழ் தொடக்கம் ஒவ்வொரு காலாண்டுக்கும் இப்பொய்கை இதழ் இணையத்தளத்தில் வெளிவரவிருக்கிறது. வாசகர்களுக்கு நிறைவைத்தரும் புதிய ஆக்கங்களை பொய்கை வரவேற்கிறது.

**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**

- *வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)*
- *இலங்கை / இந்திய இனிப்புப் பண்டங்கள் (Sweets)*
- *இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)*



416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944



**மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை தரமான குழந்தை வளர்ப்பு உள்ளடங்கிய வாழ்வியல் ஆலோசனைகள்**

KG Master
வாழ்வியல் ஆலோசகர்
Office: 416.291.2611
Mobile: 416.725.5112

## மேலைத் தேசத்தில்

## கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# பரம்பரை வீட்டு வைத்தியம்

***கடந்த இதழ் தொடர்ச்சி***

(5)ஆறுசுவையின் செயல்-காரம் - உடலுக்கு உஷ்ணத்தைக்கூட்டுவதுடன் உணற்சிகளை கூட்டவும், குறைக்கவும் செய்யும்.

கசப்பு - உடம்பிலுள்ள உதவாத கிருமிகளை அழித்து உடம்பிற்கு சக்திகூட்டும். சளியைக் கட்டுப்படுத்தும்.

இனிப்பு - உடம்பின் தசையை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. வாதத்தைக்கூட்டும்.

புளிப்பு - இரத்தக்குழாயின் அழுக்கை நீக்க வல்லது. வாதத்தைக்கூட்டும்.


துவர்ப்பு - இரத்தம் வெளியேறாது தடுக்க வல்லது. இரத்தம் உறைவதை கூட்டும் தன்மையுள்ளது.

உப்பு - ஞாபகசக்தியை கூட்டும். கூடினால் உடம்பில் வீக்கத்தை ஏற்படுத்தும்.

(6)அழுதால் நன்மைதரும் - அழுவதால் மனதில் தேங்கிய உணற்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனம் அமைதிப்படும் என்று விஞ்ஞானிகள் ஆராட்சி மூலம் கண்டறிந்துள்ளனர். இதேபோலவே வாய்விட்டு பாடுதல், மனதில் இருப்பவற்றை வெளியாகப்பேசுதல் ஆகியவையும் மனதில் ஏற்பட்ட இறுக்கத்தை (Mental Stress) தரத்தவல்லவை. இதனாலன்றோ நம்மூதாதையர் ‘வாய்விட்டுப்பேசினால் நோய்விட்டுப்போகும்’ என்றும். ‘திருவாசகத்துக்குருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்றும் சொல்லி வைத்திருக்கன்றனர்.

(7)அன்னாசிப்பழம் - இந்த அன்னாசிப்பழம் இரத்தத்தைச் சுத்திசெய்கிறது. ஜீரணசக்தியை கூட்டும் தன்மையுள்ளது இதில் இருக்கும் ‘ப்றோமலென்’ (Bromelan) என்னும் தாதுப்பொருள் வாதத்தை தணிக்கவல்லது. நன்குபழுத்த, பழங்களையே சாப்பிட வேண்டும்.

(8)அரைக்கருப்பன் சரியாக - இது அரையாப்பு, மர்மஸ்தானங்களில் ஏற்படும் ஒருவித அரிப்புச் செறியாகும். இதற்கு கருஞ்சீரகம், கஸ்தூரி



மஞ்சள், சாதாரண மஞ்சள், ஆகியவற்றை வேகவைத்து அவற்றை தேங்கதாய் பாலில் ஊற வைத்து பின் வேகவைத்து அது நன்கு சுண்டக்காச்சி மென்மையான சூட்டில் அவ் இடத்தில் பூசினால் சில நாட்களில் குணமாகிவிடும்.

(9)அக்கி குணமாக - பப்பாசிப்பழச்சாறும் பசுப்பாலும் கலந்து பூசலாம் தரைப்பசலிக்கீரையும் மஞ்சள்தூளும் சேர்த்து பூசினால் குணமாகிவிடும், ஆசனவாசலில் குடைச்சலுக்கு - இப்படியான அரிப்பு வயிற்றில் புழுக்கள் இருக்கும் பிள்ளைகளுக்கும் மூல வியாதி இருப்பவர்களுக்கும் காணப்படும். இதற்கு பாகல் இலை அல்லது முள்முருங்கை இலை - தளிர் இவற்றில் ஏதாவது ஒன்றை அரைத்து தேனுடன் கலந்து பூசினால் அரிப்பு குணமாகும் அதன்பின் மூலகாரணம் அறிந்து தகுந்த சிகிச்சை செய்யவேண்டும். கருஞ்சீரகத்தையும் தேனுடன் அரைத்து பூசினால். அரிப்பு குணமாகும்.

(10)ஆரோக்கியத்திற்கு - தேகஆரோக்கியத்திற்கு உணவு முக்கியம். தகுதியான உணவை அளவுடன் உண்ண வேண்டும். அரைவயிறு உணவும், கால்வயிறு தண்ணீரும் கால்வயிறு காலியாகவும் இருப்பது அவசியம். தினம் உடற்பயிற்சி, யோகாசனம் செய்தால் ஆரோக்கியம் கிடைக்கும்.


**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D**

Holistic Practitioner (canada)

Nutrition & fitness (Canada)

‘யோக சித்தர்’ வவுனியா, இலங்கை

Tele. - 416.291.3022

E.Mail-DRVPS@Hotmail.com


(11)ஆண்கள் மலடுதீர - ஆண்களுக்கு அவரது இந்திரியத்தில் ‘ஈஜீஎப்’ (EGF) என்னும் இரசாயனச்சத்து குறைவதால் ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதற்கு இந்த இரசாயனச்சத்தை மருத்துவர் மேற்பார்வையில் பாவித்தால் மலடுதீரும். எமது சித்தர்கள் அறிவுறுத்தலுக்கு அமைய யோகாசனம் செய்தாலும் குறிப்பாக ஹலாசனம், சர்வாங்காசனம், சற்பாசனம், சாந்தி ஆசனம் ஆகியவற்றை தினம் செய்தால் சிலநாட்களில் நற்பயன் கிடைக்கும்.

(12)ஆண்மை வலுப்பெற - அரசம்பழத்தை பாலில்போட்டு காச்சி வெல்லத்துடன் தினம் பருகிவந்தால் ஆண்மை வலுப்பெறும், தளற்சி நீங்கும். ஓரிலைத்தாமரையை அரைத்து பாலில்கலந்து குடித்தாலும் தளற்சி நீங்கும். செம்பருத்திப்பூவை உலர்த்தி இடித்து நீரில் கொதிக்கவைத்து வெண்சூட்டில் சர்க்கரைசேர்த்து குடித்தால் பலம் கிடைக்கும். பேரீச்சம்பழம், உழுந்து இவைகளை தேனுடன் சேர்த்து அருந்தினால் தளர்வு நீங்கும். இலுப்பைப்பூ கஷாயத்துடன் பசும்பால் சேர்த்து குடித்துவரின் ஆண்மை வலுப்பெறும்.

(13)இசைமருத்துவம் - இன்றைய நவீன விஞ்ஞான முறைப்படி மேல நாடுகளிலும், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் இசையைப் பயன்படுத்துகின்றனர். சிலநோய்களுக்கு தகுந்த இசையை தேர்ந்தெடுத்து அதை இசைத்தட்டில் பாடவைத்து நோயாளிமட்டும் கேட்ககூடிய செவிக்கருவியில் பொருத்தி தினம் சில நேரங்கள் அந்த இசையைச்செவிமடுக்க வைப்பார்கள். இந்த இசை மருத்துவம் அமோக வெற்றியளிப்பதாக நம்பப்படுகிறது. எமது மூதாதையர் பல நோய்களையும் குணமாக்க திருவாசகம் போன்ற சுவையான பாடல்களை பயன்படுத்தினர் என்பது எம்மவர் அறிந்ததே. இப்போதுதான் நமது நவீன விஞ்ஞானிகள் இந்த உண்மையை கண்டறிந் திருக்கின்றனர். இனியாவது எம்மவர் இதைநம்பி இசையை நோய்கள் தீரப்பயன்படுத்தட்டும்.

(14)இரத்தம்பெருக இரத்தம் உடம்பில் விருத்தியாக அதிகம் கீரை உணவுகள் பழ வகைகள் தினம் போதிய நீர் அருந்துதல் அவசியம். இறைச்சி, ஈரல், மீன் முதலியவை அதை உண்பவருக்கு உடன் இரத்தம் விருத்தியாக உதவும். தக்காளிப்பழமும் “பீறுறூற்’ இரத்த உற்பத்திக்கு உதவக்கூடியவை. தினம் உடற்பயிற்சியும் இடைவிடாது நடப்பதும் இரத்த விருத்திக்கு உதவும். பாதாம் பருப்பு பாலுடன் உண்பதால் இரத்த விருத்தி உண்டாகும். அத்திப்பழத்துடன் பாலும் சேர்த்து அருந்துவதும் இரத்த விருத்திக்கு உதவும்.




MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். எபிரேயர் 13:8

YOU ARE INVITED

இயேசு மாறாதவர் திருச்சபையின் 11 ம் ஆண்டு விழாவும்



June 17 2006

புதிய ஆலய திறப்பு விழா ஆராதனையும்

இடம் 880 எல்ஸ்மெயர் சாலை, யூனிட் #2
எல்ஸ்மெயர்/கென்னடி சந்திப்பில்

காலம்
மாலை 6:30 மணி

ஆலயபிரதிஷ்டை செய்பவர்
பேராயர் லோயட் பெட்டியஸ்டி
Rt.Rev.Dr.Lloyed C.Battieste D.D.P.hd
(Redemption Faith Ministres)

சிறப்பு செய்தியாளர்
அருட்திரு பெஸில் மில்லர்
Rev. Dr. Basil. Miller D.D.
(Scarborough Church of God)

அனைவரையும் குடும்ப சகிதமாக அன்புடன் அழைக்கிறோம். நண்பர்களுடன் வருகைதந்து ஆராதனையில் பங்கு பெற்று தேவாசீர் பெறுங்கள். ஆராதனையின் இறுதியில் நோயாளிகள் மற்றும் குடும்பப்பிரச்சினையுள்ளவர்களுக்காகவும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்.

அன்புடன் அழைக்கும்
போதகரும், நிர்வாகிகளும்
இயேசு மாறாதவர் திருச்சபை


(416) 831.0264 (416) 400.9519 (416) 318.6663 (416) 302.7283
unchangingjesusministries@rogersyahoo.com

நகைச்சுவைத் தொடர்


# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


நாம் ஏன் மாறினோம் எம்மை யார் மாற்றினார்கள் ?.



பூனைக்குட்டியை எங்கு கொண்டுபோய் விட்டாலும் அது தனது இடத்துக்கு திரும்பி வந்துவிடும்.




யானையும் பாம்பும் எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்.



ஆனால் உரிமைக்குரலுக்கு போய், சேர்ந்து வந்தவர்களைக்காணாமல் நடந்து வந்தவரை யாரோ வழியில் கண்டவர்கள் ஏற்றிக்கொண்டுவந்து வீட்டுக்கு கிட்ட இறக்கிவிட்டனர்.

மனிதனுக்கு மட்டும்தான் தான் எங்கிருந்து வந்தான் என்னசெய்கிறான் என்ன செய்யப்போகிறான் என்பது தெரியாது.



சில வேளைகளில் யாரிடம் கடன் வாங்கினேன் எப்போ திருப்பிக் கொடுக்கவேண்டும். என்பதே தெரிவதில்லை.

கடன் கொடுத்தவன் திருப்பிக்கேட்டதற்கே தன்னை மிரட்டினான் என பொலீசில் முறைப்பாடு செய்து கைதுசெய்யப்பட்டு கொடுத்த பணத்தைவிட வழக்காட செலவிட்டவர்கள் எத்தனை பேர்

உலகர் சற்று பின்நோக்கிச்சென்றார். நாம் முன்னர் வாழ்ந்ததபோல வாழுகிறோமா அல்லது மாறிவிட்டோமா ?

மாறியது நெஞ்சம் மாற்றியது யாரோ ?.
நாம் ஏன் மாறினோம் எம்மை யார் மாற்றினார்கள் ?.

எமது வீட்டை எமது ஊரை எமது மண்ணை எமது நாட்டை விட்டோடீவந்தபொழுது
கால்பதிக்க ஓரிடம் தேவை.. .. கிடைத்தது.
தங்க ஓரிடம் தேவை . .. ...கிடைத்தது
நாளுக்கு நாள் ஆசை தேவைகளையெல்லாம் கூட்டினோம்
ஆசைக்கும் தேவைக்கும் அடிமைப்பட்டு அவதிப்படுபவர் ஒருவர் இருவரல்ல..

ஒரு வேளை வந்தகடன் கொடுத்தால் போதும்.. ...
குடும்பத்தை அழைக்கவேண்டும் ஸ்பொன்சர்..

குடும்ப ஒன்றிணைவு பிள்ளைகுட்டி கல்யாணம் காட்சி

காலமாற்றம் எவ்வளவு மாற்றம்
மாறியது நெஞ்சம் மாற்றியது யாரோ ?.

நாம் ஏன் மாறினோம் எம்மை யார் மாற்றினார்கள் ?.

ரூபன் கையில் ஒரு பாசலைக்கொண்டுவர. ராசம்மா கடைக்கண்ணால் பார்த்து சிரித்தா இந்தநேரம்பாாத்தா இவர்கள் வரவேண்டும்.
பிறிம்லி மீனாவின் ஊரவர்களின் ஒன்றுகூடல் ஆட்டிலறி அன்னமமா செக்கண்ட்புளோா செல்லம்மா இரண்டுபேருக்கும் விசேட அழைப்பிதழ்.




பொரித்த கோழி அவித்தமுட்டை பச்சை இலைகுழை சலட் எல்லாம் சாப்பிட்ட களையுடன் வந்தவர்களுக்கு ரூபன் கையிலை பாசலுடன் நிற்பதைப்பார்த்துகொண்டு உள்ளே வர




ஹாய் உலகப்பு இதைப்பாருங்கோ என்ரை டடிக்கு நான் வாங்கின்னான் இண்டைக்கு வ்பாதேர்ஸ் டே என்றபோது ஆட்டிலறி அன்னம்மாவிற்கும் செக்கண்ட்புளோா செல்லம்மாவிற்கும் விசயம் விளங்கியது.

ரூபன் உலகர் கையில் பாசலைக்கொடுக்கமுதலே அன்னம்மாக்கா தொடங்கினா அவன் அப்போதை தொடக்கம்வைச்சிருக்கிறான் வாங்கி என்னெண்டு பாருங்கோவன்..என்றுசொல்ல உலகர் அதை வாங்க உலகப்பு ஓப்பின இற் ஓப்பின் ஈற் என்று கத்த உலகா வாங்கி திறக்க சருகைக்கரைபட்டுவேட்டி பளபளத்துக்கொண்டிருந்தது.


## ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.



## யோகா சோதிடம்


- *கிரகப் பொருத்தம் பார்த்தல்*
- *சுபமுகூர்த்தம் கணித்தல்*
- *பலன் பார்த்தல்*
- *சாதகக் குறிப்புக் கணித்தல்*

416-299-8361

## SAFETY TRUCKS

### Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

***905-793-9546 / 416-616-***

## SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence**
From **$75.00**

**Truck licence A-Z**
From **$599.00**

**In Classes**

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade** • **One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# தவிர்க்கப்பட வேண்டிய (?) மதம்

இக்கட்டுரையின் தலைப்பைப் பார்த்தவுடனே ஒருவகையான ஆச்சரியம் உங்கள் மனதில் தோன்றுவது எனக்குப் புரிகிறது. எல்லா மதங்களும் ஒன்றே என்பது தானே அடிப்படை உண்மை. அப்படியானால் எந்த மதத்தைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறார் என்று கூட நீங்கள் சிந்திப்பது எனக்குப் புரிகிறது. இங்கே நான் குறிப்பிடும் தவிர்க்கப்படவேண்டிய (?) மதம் என்பது எமது பிறப்புரிமையும் வாழ்வுரிமையும் கொண்ட மதம் அல்ல. நம்மில் பெரும்பாலானவர்களின் பின்னடைவுக்கும் தோல்விகளுக்கும் நாளடைவில் விரக்திக்கும் வழிவகுக்கும் (தா)மதம் எனும் உணர்வு. ஆமாம், தவிர்க்கப்படவேண்டியது தாமதம் எனும் கொடிய மனநோய்தான். இந்தத் தாமதம் எனும் நோய் இன, மத மொழி, கலாசாரம், பண்பாடு, அறிவியல் போன்ற எல்லாவற்றையும் தாண்டி பெரும்பாலானவர் களைப் பீடித்திருக்கும் ஒரு கொடிய நோய். இதற்கு மருந்தோ அல்லது மந்திரமோ பரிகாரமாக அமைவதில்லை. மாறாக ஒருவரது முன்னுணர்ந்து நேரத்தைக் கையாளும் ஒழுக்கவியல் தான் ஒரேயொரு வழி.

காலத்தைப் பொன்செய் என்கிறோம். ஏனெனில் காலத்தை விடச் சிறந்த விலை மதிப்பான பொருள் உலகில் எதுவுமே இல்லை. மண்ணையும் பொன்னாக்கும் சக்தி காலத்துக்கு உண்டு. உலகின் இயக்கமே காலத்தின் அடிப்படையில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தக்காலத்தின் அடிப்படைச் சிறப்பு என்ன வென்றால் அது முடிவற்றது மட்டுமல்ல முன்கூட்டியே அறியமுடியாததும் கூட. இருப்பினும் இந்தக் கால அளவை நெறிப்படுத்தும் நோக்கத்திற் காக வினாடிகளாக, நிமிடங்களாக மணித்தியாலங்களாக, நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாக, தசாப்பதங் களாக, நூற்றாண்டுகளாக வகைப்படுத்தி யுள்ளோம். இவற்றின் அடிப்படை நோக்கம் இந்தக் கால அளவை நாம் நமது வாழ்காலத்தில் நெறிப்படுத்தி அதன் மூலம் ஒரு சிறப்பான வாழ்வை வாழவேண்டும் என்பதுவே.

காலத்தின் கூறுகளின் இன்னுமொரு சிறப்பியல்பு என்னவென்றால் அவை இந்த உலகில் உள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் சமமானது என்பது தான். எந்தவிதமான பாகுபாடுமின்றி இயற்கையால் சரிசமமாக

## ஓடும் நீர் உறைவதில்லை

எமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விலை மதிக்கமுடியாத ஒன்று தான் இது. இயற்கையின் இதர அன்பளிப்புக்களான காற்று, நீர் போன்றன கூட இவ்வளவு சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. பல இடங்களில் மாசு படிந்த காற்றும், சில இடங்களில் வரட்சியால் நீர் இன்மையும் நாம் சாதாரணமாக அறிந்துள்ள விடயம். ஆனால் காலமோ சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. அதாவது இருபத்திநான்கு மணிநேரம் ஒரு நாளில் ஒவ்வொருவருக்கும் சொந்தமாகின்றது.


KG Master
416.725.5112


சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இந்தக்கால அளவை ஒருவர் எவ்வாறு கையாளுகின்றார் என்பதைப் பொறுத்ததே அவரது வாழ்வின் வெற்றியும், வெற்றியின்மையும் தீர்மானிக்கப்படுகின்றது. அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டிய விடயங்களைப் பின்போடாமல் உடனுக்குடன் செய்கின்ற மனப்பக்குவத்தைக் கொண்டவர்கள் சரித்திரம் படைக்கும் வெற்றியாளர்களே. கண்டுபிடிப்புக்களின் தந்தைகள் எனச் சரித்திரத்தில் இடம்பெற்றுள்ள பெரும்பாலானவர்கள் தமக்குக் கிடைத்த நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்கள் மட்டுமல்ல தமது கண்டுபிடிப்புக்களை தாமதிக்காமல் உடனடியாக உலகிற்கு வெளிப்படுத்தியவர் கள். இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புக்களின் கதாநாயர்களில் பெரும்பாலானவர்கள் தமது கண்டு பிடிப்புக்களை உலகுக்கு வெளிப்படுத்தத் தாமதித்திருந்தால் வேறு சிலரின் பெயர்கள் சரித்திரத்தில் அக்கண்டுபிடிப்புக்களின் தந்தைகள் எனப் பதியப்பட்டிருக்கும் என்பது தான் உண்மை.

இங்கே நீங்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றைக் கண்டுபிடியுங்கள் என்று கூறுவதாக எண்ண வேண்டாம். மாறாகக் காலத்தைப் பொன்னாகக் கருதிச் செய்ய வேண்டிய கருமங்களைத் தாமதிக்காமல் செய்யுங்கள் என்றுதான் எண்ணுங்கள். ஏனெனில் இந்தத் தாமதம் எனும் நோய் புற்றுநோய் போன்று சிறிது சிறிதாக வளர்ந்து ஒரு கட்டத்தில் ஒன்றுமே செய்ய முடியாத நிலைக்குத் தள்ளிவிடும். நீண்ட காலம் வாழ்ந்தவர்களது அனுபவரீதியான அறிவுரை என்னவென்றால், எதையும் தாமதிக்காதே என்பது தான். ஏனெனில் செய்ய வேண்டிய விடயங்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாததால் ஏற்பட்ட வலியின் அவதிக் குரல் தான் அது.


இங்கு வாழும் நமது சமூகத்தில் பெரும்பாலானவர்களது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு காரணமாக அமைவது இந்தத் தாமதம் எனும் கொடு நோய்தான். உரிய நேரத்தில் ஒன்றைச் செய்யக்கூடிய அல்லது செய்து முடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றைச் செய்யாமல் கைவிட்டதன் விளைவுகள் தான் அவர்களது பிரச்சினைகளுக்கான அடிப்படைகளாக அமைந்துள்ளன. இந்தத் தாமதங்கள் உடல் நலம் பற்றியதாக, பொருளதார நடவடிக்கைகள் பற்றியதாகப் பலவழிகளிலும் நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

நோயற்றவாழ்வுதான் குறைவற்ற செல்வம். தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தெரிந்த பழமொழி இது. ஆனால் எத்தனைபேர் இந்தப் பழமொழியின்படி தமது உடல் நிலையைத் தகுந்த நேரத்தில் கவனித்துக் கொள்கிறார்கள். இளமையாக இருக்கும் போது, மண்ணை உண்டாலும் சமிபாடு அடைகின்றது. ஆனால் காலப்போக்கில் நமது உடலியல் மாற்றங்கள் பலவிடயங்களை மறுக்கின்றன. இந்த மறுப்புக்கள் எல்லோருக்கும் பொதுவானதாக இருப்பினும் தகுந்த முறையில் முன்னுணர்வுடன் தாமதமின்றித் தமது உடல் நிலையில் கவனம் செலுத்துபவர்கள் நீண்ட காலம் சுகதேகிகளாக வாழ முடிகிறது. அனுபவரீதியாக நான் கண்ட உண்மை என்னவென்றால் பருவத்தே பயிர் செய்வது தரமான அறுவடைக்கு வழிவகுக்கும் என்பது தான். உடல்நிலை சம்பந்தமாகப் பலருக்கு நோய் ஏற்படாமல் தடுப்பதற்கான முறைகளை உடனடியாக பின்பற்றுபவர்கள் அதிக நன்மை அடைந்து விடுகிறார்கள். தாமதித்தவர்கள் தமது தவறைக் காலம் தாழ்த்தி உணர்ந்து கொள்கிறார்கள். ஒரு சிலர் நீண்டகாலம் தாமதிப்பதால் அவர்களது உடல்நிலை "திருத்தினாலும் மொத்த நட்டம்" என்ற நிலைக்குச் சென்றுவிடுகிறது. நமது உடலின் உண்மை நிலை என்னவென்றால் அது நமது உயிர் உள்ளவரைக்கும் இருக்க வேண்டியிருப்பதால் பராமரிக்கப்பட வேண்டியதே. ஒரு விடயத்தின் சரியான ஆரம்பம் என்பது அந்த விடயத்தின் முடிவை முன்கூட்டியே தீர்மானிக்கும் தகைமையில் தங்கியுள்ளது. அதாவது முடிவை முன்கூட்டியே அறியமுடியாத முயற்சி தோல்வியில் சென்றடையும். எனவே வெற்றிகரமான முயற்சி அதன் கால அளவில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக அமையும். இதனால் தான் வெற்றிகரமான முயற்சிகளுக்குக் காலதாமதம் என்ற நோய் பீடிப்பதில்லை. மாறாக ஒரு முயற்சியில் ஈடுபட்ட பின்னர் அதைபின்போடுவதென்பது தோல்வியை முன்கூட்டியே விலைக்கு வாங்கியதாகிவிடும்.

பருவத்தே பயிர் செய்யவேண்டும் என்பது வேளாண்மைக்கு மட்டும் உரியதல்ல. நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கையாகிய வயலில் அந்த அந்த பருவத்திற்கு ஏற்றவாறு பயிர் செய்ய வேண்டும். ஒரு பருவத்தில் செய்யவேண்டியதை இன்னொரு பருவத்திற்குப் பினபோடுவதால் எதுவித பலனும் இல்லை. அதே போன்றுதான் ஒரு குழந்தையின் உடல், உளவர்ச்சிக்குத் தேவையானவற்றை அந்ததந்த நேரத்தில் செய்யும் முன்னுணர்வு பெற்றோர்களுக்கு வேண்டும். எத்தனையோ பெற்றோர்கள் காலத்தே பயிர் செய்யாது காலத்தைப் பின்போட்டதால் கனமானதும் கடினமானது மான வாழ்வு வாழந்து கொண்டிருக்கிறார்கள். செய்யவேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் தாமதித்தமையே இவர்களது தற்போதைய இன்னல்களுக்குக் காரணம்.

ஆம் வாசகர்ளே! நல்லதை நன்றே செய்யுங்கள் அதை இன்றே இப்போதே செய்யுங்கள். தாமதிக்காதீர் கள். நாளை என்பது எதிர்பார்ப்பு, இன்று என்பது ஐதார்த்தம் இப்போது என்பது வெற்றியின் அடித்தளம்.



கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*



JENNY AUTO SALES ***INC.***



***(Kennedy & Steeles)***

கடந்த பத்து வருடங்களாக Jenny Auto sales, Markham மூலம் பல்லின மக்களின் நல் ஆதரவைப்பெற்ற Anton தற்போது வீடு விற்பனைத்துறையிலும் முன்னணியில் திகழ்கின்றார்.


| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Accord | - | 13,000.00 |
| 2001 | Toyota Corolla | - | 8,500.00 |
| 2003 | Toyota Corolla | - | 10,500.00 |
| 2002 | Honda Civic | - | 8,995.00 |
| 2002 | Honda RV | - | 14,995.00 |
| 1999 | Honda Civic | - | 7,500.00 |
| 1996 | Toyota Corolla | - | 3,995.00 |
| 1997 | Honda Accord | - | 5,995.00 |
| 1998 | Toyota Corolla | - | 6,500.00 |
| 1998 | Toyota Camry | - | 6,995.00 |
| 1997 | GM Savana | - | 4,500.00 |
| 2000 | Dodge Caravan | - | 4,500.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals

Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048

Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4





YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்



விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

# என் பிரச்சினையைத் தீர்ப்பது என் கையில் தான் தங்கியுள்ளது

என் பாரிய பிரச்சினை, நான் எதிர்பாராத விதத்தில் திடீரெனத் தீர்ந்து என்னை வியப்படையச் செய்யலாம் எனும் உண்மையை மனதார உணர்ந்து, இன்று அதை ஒப்புக் கொள்கிறேன்.

"ஐயோ கடவுளே! நீண்டுகொண்டே போகும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண என்னால் முடியவில்லையே! அவன் /அவள் கொஞ்சங்கூட தன்பிழையை உணர்ந்து மாறவில்லையே. இக்கஷ்டத்தை எப்படிச் சமாளிப்பது என்பது எனக்குத் தெரியவில்லையே!, எனப் பலர் அங்கலாய்ப்பது சர்வசகஜம். "என் வாழ்வில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் தகாத சிந்தனைகள், என் மனதில் எழாமல் தடுப்பது எப்படி" அல்லது, "எனது இதயத்தை முறுக்கிப் பிழிந்து வேதனை தரும் இந்தக் கெட்ட உணர்வுகள் மீண்டும் மீண்டும் எழுந்து என்னை வருத்தாமலிருக்க நான் என்ன தான் செய்ய வேண்டும்," எனப் பலர் குமுறுகின்றனர்.

எம் வாழ்வில், எமது செயற்பாடுகள் அனைத்தையும், எமது உடல் மட்டுமன்றி, எமது உள்ளார்ந்த ஆன்மா, மனம் எனும் மூன்று பரிணாமங்களும் சேர்ந்து பூரணமாக அநுபவிக்கின்றன எனும் உண்மையைப் பலர் உணர்வதில்லை. வாழ்வில் நாம் கற்றுக் கொள்பவை அனைத்தும் இந்த மூன்று பரிணாமங்களிற்கூடாகவே எமக்குத் தெரிய வருகின்றன. எமது ஆசை அபிலாஷைகளை நாம் அடைந்து அநுபவித்திட இம் மூன்று பரிணாமங்கள் மூலமாகவும் அவற்றை அடைந்திட நாம் விரும்ப வேண்டும். உங்கள் உடல் உள்ளம், ஆன்மா எனும் மூன்று பரிணாமங்களையும் நீங்கள் சரிவிகித சமானமாகப் போஷிப்பதனால் அவை பூரண இசைவுடன் ஒன்றிணைந்து இயங்கினால் தான், உங்களால் உங்கள் கருமங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். இதனால் தான் சிறுவயது முதல் நாம் அனைவரும் எமது ஆன்மாவையும் சேர்த்துப் போஷிக்கப் பழக்கப் படுத்திக்கொள்வது அத்தியாவசியமாகின்றது. இல்லையேல் என்ன நடக்கும் தெரியுமா? உங்கள் உள்ளார்ந்த பரிணாமங்களில் ஏதாவது ஒன்றோ இரண்டோ, உங்களிற்கு எதிராகச் செயற்பட ஆரம்பிக்கும். இப்படி நேரும்போது, வெற்றிகரமாகச் செயற்படுவது உங்களுக்குக் கடினமாகவே இருக்கும். வாழ்க்கையில் உனக்கு நன்மை நடக்க வேண்டும் என நீ விரும்புவது மட்டும் போதாது. நீ விரும்புபவை உனக்கும் மற்றவர்க்கும் நன்மை தருபவையாகவும் இருக்க வேண்டும் என்பதை நீ உணர்ந்து விசுவாசத்துடன் யாசிக்க வேண்டும். உன்னிடம் வெறுப்புணர்வை தூண்டிடும் அநுபவங்களை நீ மறக்க முயற்சிப்பது மட்டும் போதாது. அந்த அநுபவங்களைப் பற்றிய உனது உணர்வுகளை மாற்றிப் கொள்ளவும் நீ முயற்சி செய்ய வேண்டும். உனக்குப் பாதகமான எதிர்மறை எண்ணங்களையும் உணர்வுகளையும் உனது மனதிலிருந்து நீக்கிட, உனது சிந்தனை ஓட்டத்தின் போக்கினை நீ கண்காணித்து சுய அலசலின் பின் மாற்றிக்கொள் வேண்டும். உனது சிந்தனையை நீ மாற்றிக் கொண்டால், உனது உணர்வுகளையும், உன்னைப் பற்றிய உனது நம்பிக்கையையும் உன்னால் எளிதில் மாற்றிக் கொள்ளமுடியும். இந்த மாற்றம் தான், "பாடம் படித்துக் கொள்வது", என்பது. உனது உள்ளார்ந்த சக்தியாம் ஆன்ம ஸ்வரூபம், மனம், உடல் மூன்றும் ஒருங்கிணைந்து இசைவுடன் செயற்பட ஆரம்பிக்கும் போது, உனது கஷ்ட காலப்பிரச்சினை உனக்குப் போதித்ததை நீ கற்றுத் தேறி விட்டாய் என்பது அர்த்தம். உனக்குப் பாடம் படிப்பித்து உன்னைத் திருத்துவதற்காகவே உன் வாழ்வில் பிரச்சினைகள் எழுகின்றன எனும் உண்மையை நீ உணர்ந்தவுடன் உன் சிந்தனை, சொல், செயல் மூன்றையும், உனது நடத்தையையும் நீ தானாகவே நிச்சயம் மாற்றிக்கொள்வாய். உளவளத்துணை, உன்னை நீயாகவே மாற்றி, பிரச்சினைத் தீர்விற்கு வழிவகுக்க உனக்கு உதவுகின்றது. உன்னால் மற்றவர்களை ஒருபோதும் மாற்ற முடியாது. ஒரே ஒருவரைத் தான் உன்னால் மாற்றிட முடியும். அது, நீ தான்!

பிரச்சினையை உருவாக்கிடும் உனது சிந்தனை உணர்வு, சொல், செயலை மாற்றிக்கொள்ள நீ விரும்பினால், நன்கு யோசித்தபின் செயற்படு. மற்றவரை வஞ்சம் தீர்த்திட திரும்பத் திரும்ப பதிலடி கொடுப்பதை உடனடியாக நிறுத்து. இதனால் உனது குறிக்கோளாகிய தகாத சிந்தனைகளையும், எதிர்மறை உணர்வு களையும் முறியடிக்க முடியாதல்லவா? உனது அநுபவங்களையும் உன்னைப்பற்றிய உனது நம்பிக்கைகளையும் மீள்பரிசோதனை செய்து கொள். உனது குறிக்கோளை நீ அடைய விடாது உன்னைத் தடுத்திடுபவைக-ளை உடனடியாகக் கைவிடு. ஆன்மா, உள்ளம், உடல் எனும் உனது மூன்று மட்டங்களிலும் சரிசமமாக நீ இணைந்து பூரணமாகச் செயற்படும் போது தான், தகாத சிந்தனைகளையும், உணர்வுகளையும் நீ தவிர்த்துக் கொள்ளலாம். பழக்க தோஷத்தால் திரும்பத் திரும்ப நீ விடும் பிழைகளைத் திருத்தி அமைத்துக் கொள்வதால், நீ விரும்பாத அநுபவங்கள் நேராமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்றுவரை உனது மனதைத் தெளிவாக்குவதும் உனது இதயத்து ரணங்களைக் குணப்படுத்துவதும், வேறு வேறான இரண்டு செயற்பாடுகள் என நீ தப்புக்கணக்கு போட்டிருக்கலாம். உனது மனமும், இதயமும் கைகோர்த்துக் கொண்டு ஒருமித்துச் செயற்படும் நண்பர்கள் என்பதை இன்று உணர்ந்து கொள். உனது குறைபாடுகளை உணர்ந்து, உன் சிந்தனை, சொல், செயல் மூன்றையும் நீயாகவே மாற்றிக் கொள்வதால் வெற்றிகர பிரச்சினைத் தீர்வை ஏற்படுத்தி இன்புற்றிரு. நீ மாறியவுடன், பிரச்சினையின் மற்றப்பங்காளியும் உனது உதாரணத்தைப் பின்பற்றி மாறுவது நிச்சயம் என்பதை மறந்து விடாதே.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் (79)

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி






# வில்லனாக மாறும் கதாநாயகர்கள்

## நேர்காணல் - இயக்குனர் பேரரசு

"திருப்பாச்சி", "சிவகாசி" , "திருப்பதி" ஆகிய மூன்று வெற்றித் திரைப்படங்களைத் தந்துள்ளவர் இயக்குநர் பேரரசு. பக்கா கமர்சியல் இயக்குநர் என்று அறியப்பட்டுள்ளவர். அதனாலேயே பெரிய நடிகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர். "விளம்பரம்" பத்திரிகைக்காக இயக்குநர் பேரரசுவை, அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

கேள்வி: "விளம்பரம்" வாசகர்களுக்காக உங்களை சுருக்கமாக அறிமுகப்படுத்திக் கொள்ளங்கள்.

பேரரசு: என்னுடைய சொந்த ஊர் நாட்டரசன்கோட்டை. செட்டிநாடு பகுதியில் உள்ள முக்கியமான ஊர்களில் ஒன்று. எங்கள் குடும்பம் விவசாயத்தை பின்னணியாகக் கொண்டது. திரைப்படம் குறித்த கனவுகளை என்னுள் விதைத்தவர் என் தந்தைதான். விவசாயியான என் தந்தை கதை, கவிதைகள் எழுதுவார். நாற்பது வருடங்களுக்கு முன் திரைப்பட இயக்குநராக வேண்டும் என்ற ஆசையில் சென்னைக்கு வந்து, மூன்று வருடங்கள் முயற்சித்து, குடும்ப நெருக்கடிகள் காரணமாக ஊருக்குத் திரும்பி விட்டவர் அவர். அவரால் முடியாததை நான் நிகழ்த்த வேண்டும் என்று விரும்பி, அந்த நோக்கத்திலேயே என்னை வளர்த்தார். என் சிறுவயதில் அவரது திரைப்பட முயற்சிகளையும் அவற்றில் அவர் தோல்வியைச் சந்தித்தையும் கதை, கதையாக என்னிடம் சொல்வார். அது திரைப்பட இயக்குநராக வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை என்னுள் உருவாக்கிவிட்டது.

சென்னைக்கு திரைப்பட இயக்குநர் கனவுகளுடன் புறப்படும் போது, என்னுடைய சில கதை, கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந் தன. அது திரைப்பட உதவி இயக்குநராக சேர எனக்கு உதவி செய்தது. இராம. நாராயணன் என்னை சேர்த்துக் கொண்டார்.

கேள்வி: இலட்சிய நாயகர்களாக, நல்லவர்களாக, சமூக விரோதிகளை ஒழிப்பவர்களாக இருந்த தமிழ் திரைப்பட கதாநாயகர்களின் பிம்பம் சமீப காலங்களில் மாறத் தொடங்கியுள்ளது. ரவுடிகள், தாதாக்கள், சமூக விரோதிகள் பாத்திரங்கள்தான் கதாநாயகர்களாக இப்போது வெளிவரும் பெரும்பாலான திரைப்படங்களில் இருக்கிறது. உதாரணம் "புதுப்பேட்டை" , "பட்டியல்", "நந்தா". . . . இந்த மாற்றத்துக்கு காரணம் என்ன?

> "தி டாவின்சி கோட்" திரைப்படம் ஏசுநாதர் பிறந்த பூமியான ஜெருசலத்தில்கூட தடை செய்யப்படவில்லை. பகுத்தறிவுவாதிகளின் ஆட்சி யில் தமிழகத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது.

பேரரசு: ஒவ்வொரு காலகட்டத்திலும், ஏற்கெனவே சொல்லப்பட்டு வந்த கோணத்தில் இருந்து மாறி, ஒரு புதிய கோணத்தில் கதையை சொல்லும் முயற்சி எடுக்கப்படும். ஏனெனில் ரசிகர்கள் மிக விரைவில் அலுப்படைந்து விடுகிறார்கள். தமிழில் திரைப்படம் அறிமுகமான ஆரம்ப காலகட்டத்தில் பக்திப் படங்களே அதிகம் வெளிவந்தன. அதன்பிறகு சரித்திரப் படங்களின் காலம் தொடங்கியது. தொடர்ந்து சமூகப் படங்களை அதிகம் எடுத்தார்கள். இந்த காலகட்டத்தில் நீங்கள் குறிப்பிடுவது போல் கதாநாயகர்களை அவதாரப் புருஷர்களாகவும் நல்லொழுக்கத்தின் மொத்த உருவகமாகவும் காட்டினார்கள். இப்போது தாதாக்கள் மற்றும் ரவுடிகள் குறித்த திரைப்படங்களின் காலம். இந்த மாற்றத்துக்கு இரண்டு விதமான காரணங்கள் எனக்குத் தோன்றுகின்றன. ஒன்று, ரவுடிகள் மற்றும் தாதாக்களின் உலகம், பார்வையாளர்களைப் பொறுத்த வரைக்கும் அதிகம் தெரியாத மர்மமான பிரதேசம். இதன் காரணமாகவும் இயல்பாகவும் குற்ற உலகத்தை தெரிந்துகொள்வதில் பார்வையாளர்களிடம் ஒரு ஆர்வம் இருக்கிறது. இரண்டாவது காரணம், கதாநாயகர்களை அவதார நாயகர்களாக காண்பித்த திரைப்படங்களைவிட ரவுடிகள், தாதாக்கள் குறித்த திரைப்படங்கள் யதார்த்தத்திற்கு மிக நெருக்கமாக இருக்கின்றன. எனவே பார்வையாளர்கள் இந்தவிதமான திரைப்படங்களை அதிகம் பார்க்கிறார்கள்.

குற்ற உலகத்தைப் பற்றிய திரைப்படங்களுக்கு உலக அளவில் வித்திட்ட திரைப்படம் "காட்பாதர்". இந்தியாவில் இந்த உலகத்தைத் திறந்து வைத்தவர் ராம்கோபால் வர்மா. குற்ற உலகத்தைப் பற்றிய திரைப்படங்கள் அதிகம் வருவதும் அவை வெற்றி பெறுவதும் சமூகத்தில் வன்முறை மீதான ஆசையை அதிகமாக்கும் என்று சொல்கிறார்கள். எனக்கு இதில் நம்பிக்கை இல்லை. பார்வையாளர்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எதனை எடுத்துக் கொள்ள வேண்டும், எதனை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரியும்.



கேள்வி: ஆனால், பெரிய மாற்றங்கள் இல்லாமல் தற்போது வெளிவரும் எல்லாப் படங்களும் ஒரே மாதிரியானவையாகவே இருக்கின்றன. ஒரே மாதிரியான பாடல்கள், ஒரே மாதிரியான சண்டைக் காட்சிகள், ஒரே மாதிரியான காட்சி அமைப்புகள் . . . இதற்கு என்ன காரணம்?

பேரரசு: காரணம் காலகட்டம்தான். திரைப்பட படப்பிடிப்புக்கான காலகட்டம் குறுகிவிட்டது. எதனையும் விசாலமாக சிந்தித்து செய்வதுக்கான சூழ்நிலை இயக்குநர்களுக்கு இப்போது இல்லை. எல்லாவற்றிலும் அவசரம். அவசரம், அவசரம். நீங்கள் குறிப்பிடும் குறைபாடுகளுக்கு இதுதான் எனக்குத் தெரிந்த காரணம். சில திரைப்படங்கள் எப்போதும் போல் விதிவிலக்காக வருகின்றன.

கேள்வி: மகேந்திரன், பாலுமகேந்திரா, பாரதிராஜா, தேவராஜ் மோகன், ஆர். சுந்தராஜன் இவர்களுடைய காலகட்டத்தில் வெவ்வேறு விதமான திரைக்கதைகளுடன் புதிய கதாபாத்திரங்களையும் புதிய உலகத்தையும் கொண்ட திரைப்படங்களைக் கொடுத்தார்கள். இது ஏன் இப்போதைய புதிய தலைமுறை இயக்குநர்களுக்கு சாத்தியப்படவில்லை?

பேரரசு: நீங்கள் குறிப்பிடும் இயக்குநர்களின் காலகட்டத்தில்தான் எஸ். பி. முத்துராமன், ராஜசேகர், பில்லா கிருஷ்ணமூர்த்தி, ஏ. ஜெகநாதன் போன்ற கமர்சியல் இயக்குநர்களும் இருந்தார்கள் என்பதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதுபோல் இப்போதும் என்னைப் போன்ற கமர்சியல் இயக்குநர்கள் இருக்கும் காலகட்டத்தில்தான் சேரன், தங்கர்பச்சான், பாலாஜி சக்திவேல் போன்ற இயக்குநர்களும் இருக்கிறார்கள்

**சந்திப்பு: சிவதானு**

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




Thinking of Buying, Selling or Leasing Any Properties?


Just Call Justin

Buy Or Sell Properties Thru Our "Real Team" And You Will Have A Chance To Win One Of Many Prizes**




Justin M.William
Sales Representative
416-803-7344

Brimley/Steeles

Asking: $459,000
Quality Monarch Built Detached House with 4+1 Brms. Finished Basement. Huge Back Yard.

Brimley/Steeles

Asking: $ 69,000
Grocery Store in a high Demand Markham area. Best for a Family Business. Be your own Boss.

Kennedy /Sheppard

Asking : $159,900
3Bedrms, 2 Washrms, Well Maintained Building. Close To Everything

Scarborough


Space available for lease in a strip plaza. Uses: Travel Agency, Digital Printing, Photo Lab etc.





REAL TEAM

1st Prize
2007 Toyota Corolla CE
Lucky Draw Will Be Drawn On January, 2007

Markham/Steeles

Asking: $ 339,900
Less Than 2 Years Old, Semi Detached Home with 3 Bedrms. Finished Basement. Lots of up-grades.

Brampton

Asking: $ 564,000
Bovaird& Fernforest. Almost 4000 Sq Ft Detached House with 4+2 Bedrooms and Basement Apt.

Peterborough
Gas Station
FOR SALE
Asking: $39,000
Great opportunity to start your own business. Call for details.

Scarborough
Take Out
FOR SALE
Asking: $29,000
Take Out Restaurant in a Busy strip Plaza. All chattels are included in the price. Low Rent. Call for more details

HomeLife GTA Realty Inc., *Brokerage, 1711 McCowan Road, Scarborough, On. M1S 3Y3 Tel: 416-321-6969

**some conditions may apply
This is not intended to solicit the properties currently listed for sale.
*Each office independently owned and operated
Prizes may not be as illustrated

# தமிழ் மொழிக் கிழமை 2006

## "தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு"

தமிழ் மொழிக் கல்வி, தமிழ் மொழி மேம்பாடு தமிழியல் ஆய்வு முதலியவற்றில் அனைவரது நோக்கையும் ஈர்க்கும் நோக்கோடு ரொறன்ரோத் தமிழ் மக்கள் ஏழு இடங்களில் ஏழு நாட்கள் நடத்தும் தமிழ் மொழிக் கிழமை 2006.

### முதலாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. கலைவழித் தமிழ் வளர்ச்சி - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 24, 2006 – Saturday -6.00 - 9.00pm**
இடம்:
**Wellesley Community Centre**
**495 Sherbourne St. Toronto, ON, M4X 1N8**

### இரண்டாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. ஊடக வழித் தமிழ் வளர்ச்சி - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 25, 2006 – Sunday -6.00 - 9.00pm**
இடம்:
**Meadowvale Community Centre**
**6655, Glen Erin Drive. Mississauga, ON. L5N 3L4**

### மூன்றாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. வணிக மேம்பாட்டில் தமிழ் - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 26, 2006 – Monday -6.00 - 9.00pm**
இடம்:
**Terry Miller Recreation Centre**
**1295 Williams Pkwy, Brampton, ON, L6F 3J8**

### நான்காம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. வீட்டு முதல் மொழியாகத் தமிழ் - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 27, 2006 – Tuesday -6.00 - 9.00pm**
இடம்:
**Vimika**
**1959 Finch Ave. West, Downsview, ON, M3N 2V3**

### ஐந்தாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. வழிபாட்டில் தமிழ்ப் பயன்பாடு - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 28, 2006 – Wednesday -6.00 - 9.00pm**
இடம்:
**Canada Kandaswamy Temple Hall**
**733, Birchmount Road, Scarborough, ON, M1K 1R5**

### ஆறாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 29, 2006 – Thursday-6.00 - 9.00pm**
இடம்:
**Markham Village Community Centre**
**6041, HWY 07. Markham, ON, L3P 3A7**

### ஏழாம் நாள்

1. தமிழ் கற்பிப்பதில் பெற்றோர் ஆசிரியர் பங்கும் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களும் - ஆய்வுரை
2. அறிவியல் தொழில் நுட்பத்தில் தமிழ் - கலந்துரையாடல்
3. தமிழ் மரபுக் கலை - நிகழ்ச்சி

காலம்:
**June 30, 2006 – Friday-6.00 - 9.00pm**
இடம்:
**Ajax Community Centre**
**75, St. Centennial Road. Ajax, ON, L1S 4S4**

கூடுதல் விவரங்களுக்கு:
நிகழ்ச்சிக் குழு

| | |
|---|---|
| முனைவர் உருத்திரமூர்த்தி சேரன் | 416 592 0379 |
| திரு. கதிரவேலு குகதாசன் | 416 264 8591 |
| திரு. கந்தையா கணேசலிங்கம் | 416 821 6473 |
| திருமதி கலாநிதி குலமோகன் | 905 947 0648 |
| திரு. சிவம் பரமநாதன் | 416 299 3717 |
| திரு. திருச்செல்வம் | 416 920 9250 |
| திரு. திருமுருகவேந்தன் | 416 755 3880 |
| திரு. பொன்னையா கனகசபாபதி | 416 283 1544 |
| திரு. மாமூலன் | 416 897 0696 |
| திரு. வேலுப்பிள்ளை தங்கவேலு | 416 281 1115 |

PRINT FAST 416 752 3278

# கனடாவில் வழங்கப்படும் உடல் இயலாமை காப்புறுதி திட்டங்களின் வகைகள்

***(Source of Disability Income)*** யாவை?

இவ் உடல் இயலாமை காப்புறுதி திட்டங்களை ஐந்து வகையாக பிரிக்கலாம்.

1. கனடா, கியூபெக் ஓய்வூதிய திட்டத்தில் இருந்து கிடைக்கும் உடல் இயலாமைக்கான நட்ட ஈடுகள் (Canada, Quebec Pension Plan Disability Benefits)

கனடாவின் மத்திய அரசு (கியூபெக் மாகாணத்திற்கு மட்டும் பிரத்தியேகமானது) செயல்படுத்தும் ஓய்வூதிய திட்டத்திற்கு தங்கள் வருமானத்தில் சிறுபகுதியினை பங்களிப்பு செய்து வருபவர்கள் எந்த ஒரு நிலைமையிலும் தொழில் செய்ய முடியாத அளவுக்கு உடல்நிலைமை முற்றாக பாதிக்கப்படுமானால் மூன்றுமாதத்தின் பின்பு மாதம் $883 வரை நிவராணமாக வழங்கும். ஆனால் இத்திட்டத்தினுள் நிவராணம் பெறுபவர்களின் "உடல் இயலாதன்மை" என்பது அவர்களின் வரைவிலக்கணத்தினுள் பூரணமாக அடங்குதல் வேண்டும். ஆங்கிலத்தில் "Severe & Prolonged" என குறிப்பிடுவார்கள். அதாவது தொடர்ச்சியாகவோ அல்லது பகுதியாகவோ வரையறையில்லாத காலம் வரை அதாவது மரணத்தினை எய்தும் வரை உடல் என்பது விபத்து என்பதனாலேயோ அல்லது நோய் ஒன்றாகவோ இயங்கமுடியாத நிலைமையினை இங்கு குறிப்பிடப்படுகின்றது. 65வயதுவரை இத்திட்டத்தினுள் வழங்கி பின்னர் வேறு திட்டத்தினுள் இருந்து நிவராணம் மாற்றி வழங்கப்படும்.

2. வேலையற்றோர் காப்புறுதி திட்டத்தின் உடல் இயலாமை நிவாரணம்(Unemployment Insurance Disabiltiy Benefits)


**சிவ. பஞ்சலிங்கம்** B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


உடல் இயலாமை காரணமாக வேலையற்றோர் காப்புறுதி திட்டத்தில் இருந்து நிவாரணம் பெற்று கொண்டு இருப்பவர் மேலதிகமாக பெறும் நிவாரணத்தில் 55% வீதம் வரை பதினைந்து கிழமைக்கு மேற்குறிப்பிட்ட நிவாரணத்தினை பெற்று கொள்ள முடியும்.

3. தொழிலாளர் நட்ட ஈட்டு நிதிய நிவாரணம் ***(Workers Compensation Benefits)***

வேலை செய்யும் இடத்தில் உடல் காயமுற்று தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டால் மட்டும் பெற்ற சம்பளத்தில் 90%வீதம் வரை மாகாண அரசினால் நிர்வகிக்கப்படும் இந் நிறுவனத்தினால் உடல் தேறும்வரை பெற்று கொண்டேயிருக்கலாம். ஆனால் வேலை செய்யும் கம்பனி அல்லது ஒரு நிறுவனம் இத் தொழிலாளர் நட்டஈட்டு நிதியத்தின் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சேர்ந்த நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

4. குழுவான உடல் இயலாமை காப்புறுதி திட்டம். (Gruop Disability Insurance)

ஒரு தொழில் செய்யும் நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் அல்லது ஒரு வங்கியின் வாடிக்கையாளர்கள் யாவருக்கும் குழுவாக உருவாக்கப்பட்ட நிவராண திட்டமே இதுவாகும். இது எந்த ஒரு நிலையிலும் உடல் இயலாமைக்கு உட்பட்டவர்கள் குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு என தங்கள் சம்பளத்தில் 75% வீதம் வரை (ஆக கூடுதலாக மாதம் $3000 டொலர்வரை) உடல் தேறும் வரை நிவாரணம் பெறலாம்.

5. தனியார் உடல் இயலாமை நிவாரணம் **(Personasl Disability Policies)**

